விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 02 செவ்வாய்க்கிழமை (19.10.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 304

## 21ஆம் திகதி பாடசாலைக்கு சமுகமளிக்கமாட்டோம்

### ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கங்கள்

(கொழும்பு)

ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்கத்தினர் எதிர்வரும் 21ஆம் மற்றும் 22ஆம் திகதிகளில் கடமைக்கு சமுகமளிக்காமல் மீண்டும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவும், 25ஆம் திகதி முதல் 15

ஆசிரியர்கள் சமுகமளிக்காவிட்டால்

## அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் பணியிலமர்த்த முடிவு

(முறிகண்டி)

எதிர்வரும் 21ஆம் திகதி பாடசாலைகள் திறக்க ஆசிரியர்கள் பணிக்கு வராவிடின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் பணியிலமர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. 15

பொதுப் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டால்

## கொரோனா மீண்டும் பரவும் அபாயம்

### சுகாதாரத் தரப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

பொதுப் போக்குவரத்து சேவையை ஆரம்பிப்பதன் ஊடாக மீண்டும் வைரஸ் பரவலாம் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று கட்டுப்பாட்டுக்குள் வரும்வரையில் பொதுப் போக்குவரத்து சேவைகளை 15

## விவசாயிகளுக்கு நீதிகோரி

## வடக்கு - கிழக்கில் கவனயீர்ப்பு

### கமநல சேவை நிலையங்கள் முன்பாக பலர் அணிதிரள்வு



(யாழ்ப்பாணம்)

உரப் பிரச்சினை உட்பட விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கக்கோரி வடக்கு - கிழக்கில் உள்ள கமநல சேவை நிலையங்கள் முன்பாக நேற்று கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

(15ஆம் பக்கம் பார்க்க)

திருமணமாகி சில மாதங்களில்

## விபரீத முடிவெடுத்த குடும்பப் பெண் மரணம்

(குப்பிழான்)

யாழ். உடுவில் பகுதியில் விபரீத முடிவெடுத்த சுமார் 30 வயதான குடும்பப் பெண் உயிரிழந்துள்ளார்.

மேற்படி சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் நடந்துள்ளது.

குறித்த குடும்பப் பெண்ணுக்கு திருமண 15

## வவுனியாவில் டிப்பர் மோதி 15 வயது சிறுவன் பலி



(வவுனியா)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் டிப்பர் - மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் 15 வயது சிறுவன் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, செட்டிகுளம், முதலியார்குளம் பகுதியில் நேற்று 15

கொடிகாமத்தில்

## சகோதரர்கள் மீது வாள்வெட்டு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலடிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் சகோதரர்கள் இருவர் 15

## சட்டங்கள் திருத்தப்பட்ட பின் விரைவில் மாகாண சபைத் தேர்தல்

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

சட்டங்கள் திருத்தப்பட்டதன் பின்னர் பழைய முறைப்படி மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த முடியுமென தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

புதிய முறைமையின்கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக இருந்தால், அதற்காக நீண்ட காலத்தை செலவழிக்க நேரிடு 15

கொரோனா

## 23 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 23 பேர் கோவிட்-19 தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

10 ஆண்களினதும் 15

வாக்களித்த சிங்கள மக்களே

## ராஜபக்ஷ அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்

### யாழில் மனோ கணேசன்



(யாழ்ப்பாணம்)

வாக்களித்த சிங்கள மக்களே ராஜபக்ஷ அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் 15

ரயில் மோதியதில்

## மிருசுவிலில் 10 மாடுகள் பலி

(குப்பிழான்)

யாழ்.கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றம் பகுதியில் 15

## கிளிநொச்சியில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் இடம்பெற்ற விபத்தில் 3 பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கிளிநொச்சி சாந்தபுரத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான செல்வராசா பரிமளநாதன் (வயது-59) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் கடந்த 12ஆம் திகதி வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கி துவிச்சக்கர 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மின்சார சைக்கிளில் சென்ற முதியவர் விபத்தில் உயிரிழப்பு

## கைதடியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மின்சார சைக்கிளில் சென்ற முதியவர் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இதில் புலோலி தெற்கைச் சேர்ந்த சுப்பர் இரத்தினம் (வயது - 75) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த முதியவர் கடந்த 11 ஆம் திகதி சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மின்சார சைக்கிளில் சென்று கைதடியில் உள்ள உணவகம் ஒன்றுக்கு திரும்பியுள்ளார். இதன்போது மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-03)

# உரத்துக்காக வீதியில் திருமலை விவசாயிகள்

(திருகோணமலை)

விரைவில் இரசாயன உரத்தைப் பெற்றுத்தருமாறுகோரி திருகோணமலை விவசாயிகள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். சேருவிலவிலுள்ள அனைத்து விவசாயிகளும் விவசாய சங்கங்களும் ஒன்றிணைந்து சேருநுவர சந்தியில் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனால் மட்டக்களப்பு - திருகோணமலை பிரதான வீதியில் போக்குவரத்தும் தடைப்பட்டது. ஐந்நூறுக்கும் மேற்பட்ட விவசாயிகள் இதில் கலந்துகொண்டு, விவசாயம் மேற்கொள்ளத் தேவையான உரத்தைபெற்றுத்தருமாறும் விவசாயிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும்வலியுறுத்தினர். (ம-03)

## காணி விற்பனைக்கு

நாவற்குழி - பூநகரி வீதியில் நாவற்குழிச் சந்தியில் இருந்து 500M தூரத்தில் ரெயில் பாதையைக் கடந்ததும் பிரதான வீதியில் இருந்து வலதுபுறமாக உள்ள பாதையில் இரண்டாவதாக உள்ள 2 பரப்புக் காணி 20 அடி பாதையுடன் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:- **077 773 8001** (8307)

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 – 12 – 1935

மறைவு 18 – 10 – 2021

### திரு. இராமலிங்கம் கந்தசாமி

சுழிபுரம் மத்தி கல்லைவேம்படியைப் பிறப்பிடமாகவும் காளுவன் சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இராமலிங்கம் கந்தசாமி நேற்று (18.10.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராமலிங்கம் (சட்டம்பியார்) - வேதவனம் தம்பதியரின் கனிஸ்ட புதல்வனும் காலஞ்சென்ற நடராசர் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் பூரணத்தின் (இளைப்பாறிய நெசவு ஆசிரியை) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் தனிப்புலிசிங்க முதலியார், இராமலிங்கம் விஸ்வநாதன், தெய்வானப்பிள்ளை கந்தசாமி, இராமலிங்கம் இராசபட்சம், இராமலிங்கம் முருகேசம்பிள்ளை, இராமலிங்கம் சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அம்பிகாபதி அம்பாள் முதலித்தம்பி, பரமேஸ்வரி சோமசுந்தரம், காலஞ்சென்ற நடராசர் செல்வநாயகம் (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி ஊழியர்), காலஞ்சென்ற நடராசர் பாலகணேசன் (தெல்லிப்பளை - பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், ஓய்வுபெற்றவர்), நடராசர் சிவபாலகணேசன் (ஓய்வு பெற்ற தேசிய சேமிப்பு வங்கி D.G.M), மங்கையர்கரசி சுரேந்திரநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.10.2021) செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.. (C-2840)

காளுவன் சந்தி, சுழிபுரம்.
021 225 2769
077 854 7244
தகவல் குடும்பத்தினர்

## முன்னணி நிறுவனத்தில் சிறந்த தலைவர் ஆகுங்கள்!



நாங்கள் இலங்கையில் சிறந்த நாமத்தைக் கொண்ட நிறுவனங்களில் ஒன்று, தேசிய மற்றும் சர்வதேச அளவில் உயரிய விருது பெற்ற நிறுவனம், தொழில் செய்வதற்கு சிறந்த சூழலைக் கொண்ட நிறுவனம், இது இலங்கையில் சிறந்த வியாபார நிறுவனங்களில் ஒரு நிறுவனம்.

**நாங்கள் எதிர்பார்ப்பது**

க.பொ.த சாதாரண தரம் / உயர்தரத்தில் தேர்ச்சி, சந்தைப்படுத்தலில் இரண்டு வருட அனுபவம், சிறந்த தொடர்பாடல் திறன், ஒரு அணியை வழிநடத்தக்கூடிய திறன் கொண்ட 25-40 வயதுடையவர்களை...

| | |
|---|---|
| நாங்கள் வழங்குகின்றோம் | . விற்பனை முகாமையாளர்<br>. உதவி விற்பனை முகாமையாளர் பதவி நிலை |
| உங்களுக்கு கிடைக்கக் கூடியது | . எல்லையற்ற வருமானம்<br>. மேல் நோக்கி செல்லக்கூடிய தொழில் பாதை<br>. விஷேடமான பயிற்சிகள்<br>. சுதந்திரமாக சேவை செய்யக்கூடிய பொருத்தமான சூழல்<br>. திருப்திகரமான தொழில் |

Great Place To Work. Certified

**உங்களை வெற்றியின் பாதையில் அழைத்துச் செல்வோம்!**

தொடர்புகளுக்கு : **077 354 5107**

உங்கள் விண்ணப்பத்தை Theesank.23@gmail.com மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கவும். (8306)

உங்கள் வாழ்க்கைக்கு. எங்கள் பலம்.

UNION ASSURANCE A JOHN KEELLS COMPANY

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

DEPARTMENT OF COMMUNITY AND FAMILY MEDICINE,
FACULTY OF MEDICINE

**INTERVIEW IN VIRTUAL MODE FOR THE POST OF TEMPORARY RESEARCH ASSISTANT**

An interview in virtual (online) mode will be held via ZOOM for the **POST OF TEMPORARY RESEARCH ASSISTANT** on 1st of November **2021 at 2.00 pm.**

Candidates who have passed the final examinations in Medicine/ Biomedical Science/ Allied Health Sciences from state Universities or UGC recognized foreign universities are encouraged to apply.

| Post | Salary scale |
|---|---|
| **Temporary Research Assistant** | **Rs.49,860/- (Fixed) per month** |

**REQUIREMENTS**

1. A First or Second Class (Upper Division) in a Special Degree in the relevant subject.
   **OR**
2. A Second Class (Lower Division) in a Special Degree in the relevant subject.
   **OR**
3. An Ordinary Pass in a Special Degree in the relevant subject.

**NOTE:**

a. An applicant, who is eligible under (3) above, could be considered for appointment only if no applicant is qualified under (1) or (2) above.

b. An applicant, who is eligible under (2) above, could be considered for appointment only if no applicant is qualified under (1.) above.

c. The Subject Specialization in Medicine/ Biomedical Science/ Allied Health Sciences would be considered as **RELEVANT SUBJECT** for the post of Temporary Research Assistant.

Perfected Application Form which is available in the website http://www.med.jfn.ac.lk/wp-content/uploads/2021/01/APPLICATION-Form.pdf. Scanned documents of educational qualifications, the copy of the bank paid slip for a sum of Rs.100/- credited to the **Peoples Bank Account No.970000090000387** of Bursar, University of Jaffna and other relevant certificates should be sent to the **Senior Assistant Registrar/ Faculty of Medicine, University of Jaffna** through email: **deanmedicine@univ.jfn.ac.lk on or before 27th of October 2021.**

ZOOM link will be notified in due course, only to the shortlisted candidates.

**Registrar**
**19.10.2021**

(C-2837)



விவசாயிகள் தற்போது எதிர்நோக்கியுள்ள உரத் தட்டுப்பாடு மற்றும் கிருமிநாசினிப் பற்றாக்குறை உள்ளிட்ட விவசாயிகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் விவசாயிகளுக்கு ஆதரவாகவும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள கமநல சேவை நிலையங்கள் முன்பாக நேற்றுத் திங்கட்கிழமை கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.
(படங்கள்:- ரவிசாந், சிவசாந்தன், மகாலிங்கம், கஜிந்தன், சுபேசன், தேவாநந்தன், ஜோசப்நயன், தவசீலன், வசந்தரூபன், சதீஸ்)

# அறிகுறிகள் தென்படாத தொற்றாளர்கள் சமூகத்தில் அதிகளவு அடையாளம்!

## பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம்

(கொழும்பு)

நோய் அறிகுறிகள் தென்படாத கொரோனாத் தொற்றாளர்களை சமூகத்தில் அதிகளவில் அடையாளம் காண முடிந்துள்ளதாக இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் மீண்டும் ஒரு முறை கீழ் மட்டத்தில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவது அதிகரிப்பை காட்டுவதாக சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

இந்த நிலைமை காரணமாக மிக விரைவில் சாதாரண மக்கள் மத்தியில் ஆங்காங்கே கொரோனாப் பரிசோதனை நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மக்கள் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றாத நிலைமையைக் காணக் கூடியதாக உள்ளது.



இந்த நிலைமை தொடர்ந்தால், கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு சிரமமான மட்டத்திற்கு மிகப் பெரிய கொரோனா அலைகள் ஏற்படக் கூடும் எனவும் உபுல் ரோஹன தெரிவித்தார். (4-5)

# 31 இலட்சம் லீற்றர் திரவ நைதரசன் உர இறக்குமதிக்குத் தீர்மானம்

(கொழும்பு)

விவசாயப் பயன்பாட்டிற்கு 31 இலட்சம் லீற்றர் நனோ நைதரசன் திரவ உரத்தை இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் முதல் தொகுதியாக ஒரு இலட்சம் லீற்றர் இன்று நாட்டுக்குக் கொண்டு வரப்படவுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இரசாயன உரத்துக்கு தடை விதிக்கப்பட்டதையடுத்து, சீனாவிலிருந்து சேதனப்பசளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

எனினும் சீனாவிலிருந்து வரவழைக்கப்பட்ட பசளை மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அவற்றில் அபாயகரமான பக்றீரியாக்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டிருந்ததுடன் அந்த இறக்குமதி முயற்சி கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-5)

# 7000 மெற்றிக் தொன் சீனி துறைமுகத்தில் தேக்கம்

(கொழும்பு)

சுமார் ஐந்து மாதங்களுக்கு முன்பு இறக்குமதி செய்யப்பட்ட 100 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதி கொண்ட சீனி கொள்கலன்கள் துறைமுகத்திலேயே தேக்கி வைக்கப்பட்டுள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்படாமல் வைக்கப்பட்டுள்ள 300 கொள்கலன்களில் 7,000 மெற்றிக் தொன்களுக்கும் அதிக தொகை சீனி காணப்படுவதாக சீனி இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் நிஹால் செனவிரத்ன தெரிவித்தார்.

தாமதக் கட்டணமாக பெருந்தொகையான பணம் செலுத்த வேண்டியேற்பட்டுள்ளதால் சீனி கொள்கலன்களை விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (4-5)

# எரிபொருள் விலையை உடனடியாக அதிகரியுங்கள்

## பெற்றோலிய கூட்டுத்தாபனம், ஐ.ஓ.சி. நிறுவனங்கள் அரசு மீது அழுத்தம்

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்துள்ள நிலையில் இலங்கையில் குறைந்த விலையில் எரிபொருள் வழங்க முடியாது.

எனவே பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றின் விலையை அதிகரிக்குமாறு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஐ.ஓ.சி நிறுவனம் ஆகியன அரசாங்கத்திற்கு வலியுறுத்தியுள்ளன.

அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்று எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டும் என்ற தேவைப்பாடு இல்லாத போதிலும் அரசாங்கத்தின் அறிவுறுத்தலுக்காக காத்திருப்பதாக இலங்கை ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஐ.ஓ.சி. நிறுவனத்தின் தலைவர் மனோஜ் குப்தா கூறுகையில், தற்போதுள்ள நிலையில் உலக சந்தையில் கச்சாய் எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது.

அவ்வாறான நிலையில் எரிபொருளை அதிக விலையில் இறக்குமதி செய்து குறைந்த விலையில் வழங்கினால் பாரிய நட்டம் ஏற்படும்.

இப்போதும் டீசல் மற்றும் பெற்றோல் ஒரு லீற்றருக்கு 30 ரூபாவால் நட்டம் ஏற்படுவதாகவும் எரிபொருள் விலையை அதிகரிக்க அரசாங்கத்தின் அனுமதி தேவையில்லை என்ற போதிலும் அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களை உன்னிப்பாகக கவனிப்பதாகவும் எரிபொருள் விலையை அதிகரிக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார். (4-5)



'தலைக்கு நிழல்' திட்டத்தின் கீழ் உடுப்பிட்டிப் பகுதியில் உள்ள குடும்பமொன்றிற்கு இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட புதிய வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் கொடித்துவக்கு தலைமையில் இடம்பெற்றது.

# இலங்கையின் முதலாவது டெஸ்ட் அணித் தலைவர் பந்துல வர்ணபுர காலமானார்



இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணியின் முதலாவது தலைவர் பந்துல வர்ணபுர சுகயீனம் காரணமாக கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தனது 68 ஆவது வயதில் நேற்றுக் காலை காலமானார்.

முழுமையாகத் தேர்ச்சி பெற்ற டெஸ்ட் அணியாக இலங்கை கிரிக்கெட் அணியை மாற்றிய பெருமை அவரையே சாரும்.

திடமான நுட்பத்தைக் கொண்ட ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகச் செயற்பட்ட பந்துல வர்ணபுர சிறந்த பந்துவீச்சாளராகவும் திகழ்ந்தார்.

ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் அபாரமான பந்து வீச்சு திறன்களையும் அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

அவர் இலங்கை அணி சார்பில் 4 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 12 ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

1982 - 83 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தடை செய்யப்பட்ட அணியுடனான தொடரில் பங்கேற்றமைக்காக அவருக்கு ஆயுட்கால கிரிக்கெட் தடை விதிக்கப்பட்டது. (4-5)

# யுவராஜ்சிங் கைதாகி பிணையில் விடுவிப்பு




இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிரடி பட்ஸ்மேன் யுவராஜ் சிங். கடந்த ஆண்டு இன்ஸ்டாகிராம் வீடியோவில் யுஸ்வேந்திர சாகலுடன் பேசிய போது சாதி ரீதியிலான சில வார்த்தைகளை பயன்படுத்தியதாக குற்றச்சாட்டு எழுந்தது.

குறிப்பாக பட்டியலின மக்களை இழிவுபடுத்தி பேசியதாகக் கூறி சட்டத்தரணி ஒருவர் அரியானா பொலிஸில் புகார் அளித்தார்.

அதன் பேரில் பொலிஸார் வழக்குப்பதிவு செய்தனர். இந்தநிலையில் இந்த வழக்கில் யுவராஜ் சிங் கைது செய்யப்பட்டார். பின்னர் சில மணி நேரத்தில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (4-6)

# முட்டை விலை அதிகரிப்பு

உள்நாட்டுச் சந்தையில் முட்டை விலையும் அதிகரித்துள்ளதாக இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

முட்டையொன்றின்விலை 14 ரூபாய் முதல் 17 ரூபாய் வரை இருந்தபோதிலும் தற்போது 20 ரூபாய் முதல் 21 ரூபாய் வரை அதிகரித்துள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க நேற்று தெரிவித்தார். (ம-03)

# இந்திய அணியுடன் இணைந்தார் டோனி



இந்திய அணியின் ஆலோசகராக டோனி இணைந்துவிட்ட புகைப்படத்தை பிசிசிஐ தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தில், இருபது-20 உலகக்கிண்ண தொடர் நடைபெறவுள்ளது.

இதற்கான இந்திய அணியின் ஆலோசகராக டோனி நியமிக்கப்பட்டுள்ளார். இதற்காக டோனி சம்பளம் கேட்கவில்லை என்றீு பிசிசிஐ தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஐ.பி.எல். முடிவடைந்ததனை தொடர்ந்து இந்திய அணி வீரர்கள் அனைவரும் ஐக்கிய அரபு அமீரகத்தில் ஒன்று சேர்ந்துள்ளனர். இவர்களுடன் டோனியும் நேற்று முன்தினம் சேர்ந்துள்ளார். (4-6)


## வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு

### வடக்கு மாகாண இளைஞர்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு

வடக்கு மாகாண இளைஞர், யுவதிகளின் முயற்சியாண்மையை ஊக்குவிக்கும் செயற்பாட்டினூடாக வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்தைக் கொண்ட இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் (NAQDA) இணைந்து நடத்தும் ஒரு நிகழ்ச்சித்திட்டம்.

தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபையினால் டிசம்பர் மாதங்களில் நடத்தப்படவுள்ள கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் துறைகளுக்கான வதிவிடப் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் எமது இளைஞர் விவகார அலகினூடாக கோரப்படுகின்றன.

பயிற்சி முடிவில் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் தொழில் முனைவோருக்கு கடன்வசதிகளும் ஏற்பாடு செய்து தரப்படும்.

விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் அனைவரும் இலவச வழிகாட்டல் கருத்தரங்கொன்றில் பங்குபற்றுவதன்மூலம் தங்களுக்கேற்ற பயிற்சிநெறியினைத் தெரிவு செய்துகொள்ளமுடியும்.

பயிற்சிநெறிகள்

* வீட்டுத்தடாகங்களில் மீன் வளர்ப்பு (Pond Fish Culture)
* அலங்கார மீன் வளர்ப்பு (Ornamental Fish Culture)
* கடற்பாசி வளர்ப்பு (Seaweed Culture)
* கடலட்டை வளர்ப்பு (Sea Cucumber Culture)
* மீன்குஞ்சு உற்பத்தி செய்தல் (Fry to Fingerling Culture)
* மீனுணவு உற்பத்தி செய்தல் (Fish Feed Preparation)
* கொடுவா மீன் வளர்ப்பு (Sea bass Culture)
* புகை மற்றும் உப்புக்கருவாடு தயாரிப்பு (Smoke or Dry Fish Production)
* சிப்பி வளர்ப்பு (Oyster Culture)
* பாலைமீன் வளர்ப்பு (Milk Fish Culture)
* பாறைப்படிம வளர்ப்பு (Live Rock Culture)
* இறால் வளர்ப்பு (Shrimp Culture)
* நண்டு வளர்ப்பு (Crab Culture)
* கடலட்டைக்குஞ்சு வளர்ப்பு (Sea Cucumber Nursery Culture)
* சிங்க இறால் வளர்ப்பு (Lobster Culture)
* நன்னீர் இறால் வளர்ப்பு (Freshwater Prawn Culture)

தகைமைகளும் நிபந்தனைகளும்

* வயது : 19 - 40 (40 வயதிற்கு மேற்பட்டவர்களின் விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படும்)
* கட்டணம் : இலவசம்
* பங்குபற்றுநர்களின் வதிவிடம் : வடக்கு மாகாணத்திற்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
* நிரந்தர மாத வருமானம் உடையவர்கள் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்ற முடியாது.
* விண்ணப்ப முடிவுத் திகதி : 19.11.2021

விண்ணப்பப்படிவத்தின் வன்பிரதிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள் (அரச வேலை நாட்களில் காலை 9.00 - மாலை 4.00 வரை)

* இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய அலுவலகங்கள் (பூநகரி, கிளிநொச்சி மற்றும் வவுனியா)
* வடக்கு மாகாணத்தின் சகல வலயக்கல்வி அலுவலகங்கள்

விண்ணப்பப்படிவத்தின் மென்பிரதிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய இணையத்தளங்கள்
http://edumin.np.gov.lk
FB Page: http://www.facebook.com\youthnorth

தொடர்பு இலக்கம் - தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வவுனியா மாவட்ட உத்தியோகத்தர் 024 222 1653 (அரச வேலை நாட்களில் காலை 9.00 - மாலை 4.00 வரை)

மேலும் பல போட்டிகள், பயிற்சிநெறிகள் மற்றும் செயலமர்வுகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவ்விபரங்களை பெற்றுக்கொள்ள இணையத்தினூடாக எம்முடன் இணைந்திருங்கள்.

**செயலாளர்**
**கல்வி அமைச்சு,**
**வடக்கு மாகாணம்.**

(C - 2841)

## இராசிபலன்

19.10.2021
ஐப்பசி 02, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 7.55 மணிவரை
உத்தராட்டாதி பிற்பகல் 1.50 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சந்திராஷ்டமம்-மகம், பூரம்
நமிகள் நாயகம் பிறந்த தினம் வளவன்

**மேஷம்** தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சயனக் குறை வான நாள்.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறை வேறும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர் கள், உங்களின் திறமைகள் வெளிப்பப டும் நாள்.

**கடகம்** உடல்நலன் சீராகும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், ஆன் மிக சிந்தனை மேலோங்கும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**சிம்மம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணா மலும் இருப்பது நல்லது, சஞ்சலங்கள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் சிறு தாம தங்கள் ஏற்படலாம்.

**கன்னி** பொறுமையால் பெருமை சேரும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சென்ற இடங்களில் செல் வாக்கு மேலோங்கும் நாள், வருமா னம் திருப்தி தரும்.

**துலாம்** செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சி கள் கைகூடும், தாழ்ந்த சுபாவமுண்டு, எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சி கள் கைகூடும், பொது வாழ்வில் புகழ் கூடும்.

**தனுசு** தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல் வீர்கள், திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள்.

**மகரம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், அன்பு நண்பர் களின் ஆதரவு கிடைக்கும், குடும்பத் தில் சுகங்களும் சந்தோசங்களும் அதி கரிக்கும்.

**கும்பம்** நன்மைகள் நடைபெறும் நாள், எதிர் பார்ப்புகள் நிறைவேறும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மீனம்** பொருளாதார நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், திடீர் பய ணத்தால் திசை திருப்பங்கள் ஏற்பட லாம், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள்.

உன்னோடு பேசும் ஒவ்வொருவரும்
ஒரு ஞானி என்று நினை

# கெரவலபிட்டிய மின் நிலைய ஒப்பந்தம் இடைக்கால தடைகோரி மனுத்தாக்கல்



(கொழும்பு)

கெரவலபிட்டிய மின் நிலையப் பங்குகளை அமெ ரிக்க நிறுவனத்திற்கு வழங் குவதற்கு இடைக்கால தடை உத்தரவு கோரி உயர் நீதி மன்றத்தில் மனுதாக்கல் செய் யப்பட்டுள்ளது.

கொழும்பு பேராயர் கர்தி னால் மல்கம் ரஞ்சித் ஆண் டகை மற்றும் எல்லே குண வன்ச தேரர் ஆகியோ ரால் அடிப்படை உரிமை மனு தாக் கல் செய்யப்பட்டுள் ளது.

பிரதமர் மகிந்த ராஜப க்ஷ, அமைச்சர்கள், அமை ச்சரவை செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர் உட்பட 54 பேர் பிரதிவாதிகளாக பெயரி டப்பட்டுள்ளனர். செப்டெம்பர் 6 ஆம் திகதி கூறப்பட்ட ஒப்பந்தத்தில் அமைச்சர வையில் எட்டப்பட்ட முடிவை இரத்துச் செய்து, விண்ணப் பம் மீதான விசாரணை முடி யும் வரை ஒப்பந்தம் அமு ல்படுத்தப்படுவ தைத் தடுக்க கோரியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (4-5)

## நாள் ஒன்றிற்கு
# 25 சிறுவர்கள் துஷ்பிரயோகம் 6 பேர் போதைப்பொருளுக்கு அடிமை

(கொழும்பு)

நாட்டில் நாளொன்றுக்கு 25 சிறுவர்கள் பல்வேறு துஷ் பிரயோகங்களுக்கு உள்ளாவ தாக அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

அவர்களுள் 21 சதவீத மானவர்கள் 5 வயதிற்குக் குறைந்தவர்கள் எனவும் தெரிவித்தார்.

பேருவளைப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரி வித்த சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, இல ங்கையில் நாளாந்தம் 6 பேர் போதைப்பொருளுக்கு அடி மையாவதாக அவர் தெரி வித்தார். (4-5)

# சிறைக்கைதிகள் சனிடைசர் பயன்படுத்தத் தடை

(கொழும்பு)

சிறைக் கைதிகள் சனி டைசர் பயன்படுத்துவதை தடை செய்ய சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

கைதிகளுக்கு கைகளை சுத்தம் செய்வதற்காக சவர்க் காரத்தை வழங்கவுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணை யாளர் தெரிவித்தார்.

அத்தியாவசிய தேவையின் போது மாத்திரம் அதிகாரி களின் மேற்பார்வையின் கீழ் கைதிகளுக்கு சனிடைசர் பயன்படுத்த அனுமதி வழங் கப்படும் எனவும் அவர் தெரி வித்தார். கடந்த வாரம் கொழு ம்பு மகசின் சிறைச்சாலையில் ஈரானிய சிறைக்கைதிகள் குழு ஒன்று சனிடைசர் அருந் தியதில் இருவர் உயிரிழந்திரு ந்தனர்.

அதன் அடிப்படையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (4-5)

# ஓய்வூதியத் திட்டத்தை விரிவுபடுத்த தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் ஓய்வூதியத் திட் டத்தை விரிவாக்கம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்தின் ஓய்வூதி யம் கிடைக்காதவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் வேலை த்திட்டம் தற்போது விரிவுபடுத் தப்படவுள்ளதாக உள்நாட்ட லுவல்கள் இராஜாங்க அமை ச்சின் செயலாளர் என். எச்.எம். சித்ரானந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் வெளியான அறிக்கையில் கூறிய‌தாவது, கொரோனா நெருக்கடி கார ணமாக தற்போது நாடு பொரு ளாதாரச் சிக்கலை எதிர்கொ ண்டுள்ளது.

இருப்பினும் எதிர்காலத்தில் ஓய்வூதியத்தை விரிவுபடுத்தி வழங்குவதற்கான திட்டம் அமுலுக்கு வரலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (4-5)

# இந்தியா குஷிநகர் விமான நிலையத்திற்கு இலங்கையிலிருந்து முதல் விமானம்

(கொழும்பு)

இந்தியாவின் குஷி நகரில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விமான நிலையம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நாளை திறக்கப்படவுள்ளது.

உத்தர மாநிலத்தின் வர லாற்றுச் சிறப்பு மிக்க இடமான குஷி நகரானது பௌத்த வழி பாட்டுத் தலங்களைக் கொண்ட மைந்துள்ளது. அத்துடன், புத்த பெருமான் பரிநிர் வாணம் அடைந்த இடமாகவும் இது கருதப்படுகிறது.

இந்நிலையில், இந்த விமான நிலைய திறப்பு விழா விற்கு பல நாடுகளில் உள்ள பௌத்த தேரர்கள் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அந்தவகையில், 100 தேரர் களுடனான விமானமொன்று இலங்கையிலிருந்து குஷி நகர் விமான நிலையத்துக்கான முதலாவது விமானமாகப் புறப் படவுள்ளமை குறிப்பிடத்தக் கது. (4-5)

## கருத்துரையும் கலந்துரையாடலும்

(குப்பிழான்)

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம் நடாத்தும் பொருளாதார நெருக்கடியும், விலைவாசி ஏற்றமும், அரசின் நிலைப்பாடும் எனும் தலைப்பிலான கருத்துரையும் கலந்துரையாடலும் நாளை 20 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணி முதல் கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் கலாநிதி.அகிலன் கதிர்காமர் கலந்து கொண்டு கருத்துரை நிகழ்த்துவார். (7-5-18)

# செங்குந்தா பொதுச்சந்தை மரக்கறி வியாபாரிகளினால் கடையடைப்பு முன்னெடுப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட கல்வியங்காடு செங்குந்தா பொதுச்சந்தை மரக்கறி வியாபாரிகள் கடையடைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

சந்தைக்கு அண்மையான பகுதிகளில் வீதிகளில் மரக்கறி வியாபாரம் மேற்கொள்ளப்படுவதால் சந்தையில் வியாபாரம் நடைபெறுவது இல்லை எனவும் கடந்த ஒரு வருடமாக இவ்வாறான நிலை காணப்படுவதாகவும் இதனைத் தடுத்து நிறுத்துமாறு மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபையினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் தீர்வு எட்டப்படாத நிலையில் நேற்றைய தினம் வியாபாரிகள் அனைவரும் தமது வியாபார நடவடிக்கைகளை இடை நிறுத்தி கடையடைப்பில் ஈடுபட்டனர்.

தீர்வு கிடைக்கும் வரை இந் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என வியாபாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பில் நேற்றைய தினம் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் மற்றும் நல்லூர் பிரதேச சபை தவிசாளருடன் கலந்துரையாடியதாகவும் தமக்கு உரிய நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.


எனினும் தீர்வு கிடைக்கும் வரை கடையடைப்பில் ஈடுபட உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (7-5-33)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை புதன்கிழமை காலை 6.30 மணிக்கு மாந்தை மேற்கு இலுப்பக்கடவை ஸ்ரீஆஞ்சநேயர் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சு.தயாபரக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (7-5)






மிகவும் வசதியான தொழில் துறை வங்கி சேவையை வழங்குவதற்காக இலங்கை வங்கி தனது Cash Recycle இயந்திரத்தை கடந்த சனிக்கிழமை நயினாதீவில் அறிமுகப்படுத்தியது. இதனை இலங்கை வங்கியின் தலைவர் காஞ்சனா ரத்வத்தவ திறந்து வைத்தார்.

(படம்: சிவசாந்தன்)



யாழ்ப்பாணம் பெரிய பள்ளிவாசல் அனுசரணையுடன் யாழ். முஸ்லிம் ஜனாஸா அமைப்பினரினால் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் ஒரு பகுதிக்கு தேவையான மின்குமிழ்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (படம்: யாழ். இக்பால்)

## கசிப்பு வைத்திருந்தவர் பொலிஸாரால் கைது

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் பகுதியில் கடந்த சனிக்கிழமை கசிப் புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வட்டுக்கோட்டை பொலிஸின் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதன் போது ஒருவரிடம் இருந்து **750ml** கசிப்பு மீட்கப்பட்டது. இதனை அடுத்து கசிப்பை கையிருப்பில் வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்தநபர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மேலும் சந்தேக நபருக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ததோடு மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7-5-104)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 200 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 150 | 170 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 130 | 150 |
| தக்காளி | 120 | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 60 | 40 |
| கோவா | 140 | 40 | 160 | 160 |
| கரட் | 120 | 160 | 180 | 180 |
| பூசணி | 60 | 50 | 60 | 50 |
| புடோல் | 180 | 150 | 120 | 150 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 180 | 250 |
| பெரிய வெங்காயம் | 200 | 160 | 150 | 160 |
| பாகற்காய் | 450 | 450 | 400 | 450 |
| வெண்டிக்காய் | 140 | 160 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 120 |
| பயற்றங்காய் | 250 | 200 | 170 | 240 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 60 | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 250 | 280 | 280 | 360 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 250 | 300 |
| போஞ்சி | 240 | 220 | 260 | 320 |
| கத்தரிதம்புள்ள | 200 | 180 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 50 | 100 |
| தேசிக்காய் | 400 | 350 | 350 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 65 | 60-70 | 50-80 |
| இராசவள்ளி | 300 | 320 | 280 | 280 |
| வெங்காயப்பூ | 350 | 250 | -- | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 20 |
| வல்லாரை | 20 | 70 | 250 | 30 |
| ஈரப்பலா | 60 | -- | -- | 120 |

## ஒட்டுத் தொழிற்சாலை மீள ஆரம்பிக்கப்பட்டதும் வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கும்

# கலாநிதி சுரேன் ராகவன்

(குருமன்காடு)

ஒட்டுசுட்டான் ஆடைத் தொழிற்சாலை ஆரம்பிக்கப் பட்டதும், முல்லைத்தீவு மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கும் என பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னித் தொகுதி தலைவருமான கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் ஒட்டுத் தொழிற்சாலைக்கு நேற்று முன்தினம் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டு அதன் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கேட்டறிந்தார்.

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

கைத்தொழில் அமைச்சின் ஊடாக அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை மீள ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் மூலம் ஒட்டுசுட்டான் மட்டுமன்றி முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படும் எனத் தெரிவித்தார்.

(7-5-250)

# ஏ-9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் காயம்



(நெளுக்குளம்)

வவுனியா ஏ9 வீதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார் .

நேற்று இடம் பெற்ற இவ் விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நகரில் இருந்து ஏ9 பிரதான வீதியூடாக பயணித்த கார் வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்கு எதிராகவுள்ள வீதிக்கு திரும்ப முற்பட்ட போது குறித்த வீதியில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளும் வவு னியா நகரில் நேருக்கு நேர் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் . (7-5-299)

# உரப்பற்றாக்குறையை ஏற்படுத்தி விவசாய நிலங்களை அபகரிப்பதே அரசின் நோக்கம்

## குமார வெல்கம தெரிவிப்பு

(கொழும்பு)

**உரப்பற்றாக்குறையை ஏற்படுத்தி விவசாயிகளை முற்றாக இல்லா மலாக்கி, அவர்கள் இடங்களைக் கைப்பற்றி வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும். இது அரசாங்கம் வெளிநாடுகளுடன் இணைந்து முன்னெடுக்கும் மாபியாவாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.**

உரப்பற்றாக்குறை மற்றும் அதிபர் - ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதால் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மீண்டும் குறைக்கப்படமாட்டாது. இந்த அரசாங்கம் அதற்கான எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்கப் போவதில்லை.

அமைச்சர் பந்துல குணவர்த்தன போன்றோர் தெரிவிக்கும் கருத்துக்களிலிருந்து இவற்றை தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

விவசாயத்துறை அமைச்சர் என்ன கூறுகிறார் என்று அவருக்கே புரியவில்லை. காரணம் அவர் சேதன உரத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்.

ஆனால் இரசாயன உரமே இறக்குமதி செய்யப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியும் இவ்வாறானதாகவே காணப்படுகிறது.

இவை அனைத்தும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் போலியான செயற்பாடுகளாகும்.

விவசாயிகளை முற்றாக இல்லாமலாக்குவதற்கே இவர்கள் முயற்சிக்கின்றனர். விவசாயத்தை முழுமையாக இல்லாமலாக்கி , விவசாயிகளிடமிருந்து நிலத்தை அபகரித்து அவற்றை வெளிநாடுகளுக்கு விற்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

அபிவிருத்தி எனக் கூறிக் கொண்டு தேர்தலில் வாக்குகளைப் பெற முயற்சிக்கின்றனர்.

தேர்தல் இடம்பெற்றால் அரசாங்கத்தின் நிலையை அறிந்து கொள்ளலாம்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சி நிறைவடைந்த பின்னர் இலங்கை மோசடி ஆட்சியாக மாறியுள்ளது எனத் தெரிவித்தார். (4-5)

# அரசின் கருத்துக்களை செவிமடுத்து கல்வி நடவடிக்கையை தொடருங்கள்

## இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா

(கொழும்பு)

அதிபர் - ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் அரசாங்கத்தினால் சிறந்த யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவற்றை ஏற்றுக்கொண்டு மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு அதிபர் - ஆசிரியர்களிடம் கோருவதாக கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

அதிபர் - ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொவிட் அச்சுறுத்தலின் காரணமாக இலங்கையிலுள்ள மாணவர்கள் மாத்திரமின்றி முழு உலகிலுமுள்ள மாணவர்களது கல்விச் செயற்பாடுகள் முற்றாகப் பாதிப்படைந்துள்ளன.

நாட்டிலுள்ள மாணவர்கள் தொடர்பில் அக்கறையுடன் செயற்பட வேண்டுமே தவிர , மாணவர்களின் கல்வியை 40 ஆண்டுகள் பின்னோக்கிக் கொண்டு செல்ல முயற்சிக்கக் கூடாது.

எனவே பாடசாலை மாணவர்கள் குறித்து சிந்திக்குமாறு. ஸ்டாலின் போன்றவர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம். அவர்களது பிள்ளைகளுக்கு இரண்டு ஆண்டுகள் கல்வி இல்லாமலாக்கப்படும் பட்சத்தில் நிலைமை என்னவாகும்?

எனவே மாணவர்கள் தொடர்பில் சிந்தித்துச் செயற்பட வேண்டும். பெற்றோரும் தமது பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குமாறே கோருகின்றனர்.

கொவிட் நிலைமை காரணமாக அனைவரும் நெருக்கடியிலுள்ளனர்.

எனவே அதிபர் - ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள சிறந்த யோசனையை ஏற்றுக்கொண்டு மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவித்தார். (4-5)

# திடீரென உயிரிழந்த நிலையில் கரையொதுங்கும் மீன்கள்

(கொழும்பு)

மாத்தறை, பொல்ஹேன கடற்கரையில் உயிரிழந்த நிலையில் மீன்கள் கரையொதுங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக உயிரிழந்த நிலையில் பாரிய்ளவிலான மீன்கள் கரையொதுங்கி வருவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மற்றும் பிரதேச மக்களினால் நாரா நிறுவனத்திடம் தெரிவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சில மாதங்களுக்கு முன்பு இறந்த இரண்டு திமிங்கலங்களின் உடல்களும் கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்டன. அதற்கமைய, நாரா நிறுவனத்தின் மூத்த நிபுணர் உபுல் லியனகேவின் அறிவுறுத்தலின் பேரில் விசாரணை அதிகாரிகள் குழு ஒன்று அந்தப் பகுதிக்கு வந்திருந்தது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை விசாரணைகளின் பின்னரே கூற முடியும் என அவர் குறிப்பிட்டார். (4-5)


# கண்ணீர் அஞ்சலி

## திருமதி நீலாதேவி தனேந்திரன்

யாழ். மாவட்ட
தேசோதய தலைவர்
யாழ். மாநகர சபை
உறுப்பினர்
**நா.தனேந்திரன்**
அவர்களின் அன்பு
மனைவி
திருமதி
**நீலாதேவி
தனேந்திரன்**
அவர்கள் காலமான
செய்தியறிந்து
துயரடைவதுடன் அவரின்
குடும்பத்தினருக்கு எமது
அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.



வலம்புரி நிர்வாகம் (இ)



# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம்

## 185/5, கல்லை வேம்படி வீதி, வட்டாரம்-09

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகம் எல்லைக்குட்பட்ட வட்டாரம் 09 கல்லை வேம்படி வீதியிலுள்ள இல.185/5 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டில் இதுவரை காலமும் பதியப்படவில்லை.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் சொரியலாக 2/3 பங்கினை **வயிரமுத்து மாரிமுத்துவும் பெண் சரஸ்வதியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு இ.கந்தையா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 21487/15.05.1957ஆம் இலக்க உறுதியால் **எல்லுப்போலை சபாபதியும் கதிரேசர் பெரியதம்பி கைம்பெண் பத்தினிப்பிள்ளையும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

**சின்னத்தம்பி சுப்பிரமணியமும் பெண் இரத்தினமும்** ஆகியவர்கள் குறித்த முழு ஆதனத்தில் வடக்குப் பக்கமாக நிந்தப்படுத்தப்பட்ட ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு தா. சங்கரப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 12267/02.03.1977 ஆம் இலக்க உறுதியால் குறித்த **வயிரமுத்து மாரிமுத்துவும் பெண் சரஸ்வதியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தினை **சுப்பிரமணியம் சண்முகநாதன் பெண் இராஜேஸ்வரி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு தா.சங்கரப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 12268/02.03.1977 ஆம் இலக்க உறுதியால் குறித்த **சின்னத்தம்பி சுப்பிரமணியமும் பெண் இரத்தினமும்** ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தினை **செல்லையா கணேஸ்வரனும் பெண் தவமலரும்** ஆகியவர்களுக்கு பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 12714/10.04.2011 ஆம் இலக்க உறுதியால் குறித்த **சுப்பிரமணியம் சண்முகநாதனும் பெண் இராஜேஸ்வரியும்** ஆகியவர்கள் தவணை உறுதியாக கட்டுப்படுத்தி இருந்தார்கள்.

குறித்த ஆதனத்தினை **சுப்பிரமணியம் சண்முகநாதனும் பெண் இராஜேஸ்வரியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 14079/23.07.2012 ஆம் இலக்க உறுதியால் குறித்த **செல்லையா கணேஸ்வரனும் பெண் தவமலரும்** ஆகியவர்களிடமிருந்து மீண்டும் அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தினை **துரைராசா இரவீந்திரன் பெண் இராஜேஸ்வரி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 15504/01.01.2016 ஆம் இலக்க உறுதியால் குறித்த **சுப்பிரமணியம் சண்முகநாதனும் பெண் இராஜேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **துரைராசா இரவீந்திரன் பெண் இராஜேஸ்வரி** ஆகியவர் ஆதனப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **துரைராசா இரவீந்திரன் பெண் இராஜேஸ்வரி** ஆகியவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்/ செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.**

(8309)

# சீனாவுடன் தொடரும் பதற்றம்; தாய்வான் நீரிணையில் அமெரிக்க, கனடா போர்க்கப்பல்கள்

(தாய்பே)

**சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையே பதற்றம் அதிகரித்துள்ள சூழலில், சீன எதிர்ப்பையும் மீறி தாய்வான் நீரிணைப் பகுதியில் அமெரிக்காவும் கனடாவும் தங்களது போர்க் கப்பல்களை செலுத்தியுள்ளன.**

இது குறித்து அமெரிக்க இராணுவம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அமெரிக்க கடற்படைக்குச் சொந்தமான அர்லீக் பியூர்க் ரகத்தைச் சேர்ந்த யுஎஸ்எஸ் டேவே போர்க் கப்பல் சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையிலான தாய்வான் நீரிணைப் பகுதியில் கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் செலுத்தப்பட்டது.

கனடா கடற்படைக்குச் சொந்தமான ஹெச்எம்சிஎஸ் வின்னிபெக் போர்க் கப்பலும் யுஎஸ்எஸ் டேவேயுடன் இணைந்து ரோந்துப் பணியை மேற்கொண்டது.

இந்தோ-பசுபிக் கடல் பகுதியில் அனைவருக்கும் சொந்தமானது என்ற அமெரிக்கா மற்றும் கூட்டணி நாடுகளின் உறுதிப்பாட்டை பறைசாற்றும் விதமாக அந்த இரண்டு கப்பல்களும் தாய்வான் நீரிணைப் பகுதியில் செலுத்தப்பட்டன என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தங்கள் நாட்டுடன் தாய்வான் 'அமைதியான வழியில்' இணைக்கப்படும் என்று சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் கூறினார்.

எனினும் தங்கள் நாட்டை ஆக்கிரமிப்பதற்காக சீனா தரும் அழுத்தங்களுக்கு அடிபணியப் போவதில்லை என்று தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென் உறுதியாகத் தெரிவித்தார்.

இந்தச் சூழலில், தாய்வானுக்கு தனது ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் அமெரிக்காவும் கனடாவும் தாய்வான் நீரிணைப் பகுதியில் தங்களது போர்க் கப்பல்களை செலுத்தியுள்ளன.


ஏற்கனவே இந்தப் பகுதியில் அமெரிக்கா தனது போர்க் கப்பல்களை அவ்வப்போது செலுத்தி வருவதும் அதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவிப்பதும் குறிப்பிடத்தக்கது. (7-5)

# விண்வெளியில் படப்பிடிப்பை நிறைவு செய்து பூமிக்கு திரும்பிய படப்பிடிப்புக் குழு

(மொஸ்கோ)

சர்வதேச விண்வெளி நிலையத்தில் (ISS) 12 நாட்கள் ரஷ்ய நடிகை மற்றும் திரைப்படத் தயாரிப்பாளர் ஆகியோர் விண்வெளியில் முதல் படப்பிடிப்பை நிறைவு செய்துவிட்டு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பூமிக்குத் திரும்பியதாக ரஷ்யாவின் விண்வெளி நிறுவனமான ரொஸ்கோஸ்மோஸ் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவில் தயாரிக்கப்படும் த சலெஞ் (The Challenge) என்ற படத்தின் படப்பிடிப்புக் குழுவே விண்வெளிக்கு படப்பிடிப்பை மேற்கொள்வதற்காகச் சென்றது.



நடிகை யூலியா பெரெசில்ட் (Yulia Peresild), தயாரிப்பாளர் கிளிம் ஷிபென்கோ (Klim Shipenko) மற்றும் அன்டன் ஷ்காப்லெ ரோவ் (Anton Shkaple rov) ஆகியோர் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி கசகஸ்தானில் உள்ள பைகோனூர் காஸ் மோட்ரோமில் இருந்து சோயுஸ் எம்எஸ் -18 (Soyuz MS-18) விண்கலத்தின் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்திற்குச் சென்றார்கள்.

இதன்மூலம் விண்வெளியில் படப்பிடிப்பை நடத்தும் உலகின் முதல் நாடாக ரஷ்யா வரலாறு படைத்திருக்கிறது. (7-5)




“பை” மதிப்பின், 1,560 தசம எண்களை மனப்பாடம் செய்து கூறியதன் வாயிலாக, சிங்கப்பூர் நாட்டின் சிங்கப்பூர் புக் ஆப் ரெக்கார்ட்ஸ் சாதனைப் புத்தகத்தில், 6 வயதான இந்திய சிறுமி இடம்பிடித்துள்ளார். 2018 ஆம் ஆண்டு சான்சி சூரஜ் என்ற சிங்கப்பூர் மாணவி 1,505 தசம எண்களை கூறி செய்த சாதனையை தற்போது இஷானி முறியடித்துள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு, பை மதிப்பில் உள்ள 70 ஆயிரம் தசம எண்களைப் பார்க்காமல் கூறி இந்தியாவை சேர்ந்த ராஜ்வீர் மீனா என்ற இளைஞர் கின்னஸ் உலக சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது.

# அழுவதற்கென்றே தனி அறை ஸ்பெயினில் விநோதம்

(மாட்ரிக்)

“அழுகை அறைக்கு வரவேற்கிறோம்” என்று விநோதமான வாசகத்துடன் வரவேற்கிறது ஸ்பெயினின் மாட்ரிக் நகரில் அமைந்துள்ள அழுகை அறை. மனநல பிரச்சினையினால் அதிகரித்து வரும் தற்கொலைகளைத் தடுக்கும் வகையில் இந்த புதிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கவலைகள் தீரும் வகையில் மனம் திறந்து அழுவதற்காக இந்த அழுகை அறைகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

இந்த அறையில் உளவியல் மருத்துவர் உட்பட மனச் சோர்வடையும் போது அழைக்கக்கூடிய நபர்களின் பெயர்களுடன் ஒரு மூலையில் தொலைபேசிகள் உள்ளன. அவர்களைத் தொடர்பு கொண்டு பேசியும் ஆறுதல் பெறும் வகையில் இந்த அறை கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

2019 ஆம் ஆண்டில், ஸ்பெயினில் 3,671 பேர் தற்கொலை காரணமாக இறந்துள்ளனர். அரசாங்கத் தரவுகளின்படி, 10 இளைஞர்களில் ஒருவர் மனநல பிரச்சினையுடன் இருப்பதாகவும் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 5.8 சதவீதம் பேர் கவலையால் பாதிக்கப்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. (7-5)

# கிறிஸ்தவ மத போதகர்கள் 17 பேர் ஹைதியில் கடத்தல்

(சான் ஜுவான்)

ஹைதியில், அமெரிக்காவைச் சேர்ந்த கிறிஸ்தவ மத போதகர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் 17 பேர் கடத்தப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஹைதிக்கு சென்றுள்ள அமெரிக்காவைச் சேர்ந்த கிறிஸ்தவ மத போதகர்கள் நேற்று முன்தினம் தங்கள் குடும்பத்தினருடன் ஆதரவற்றோர் இல்லத்திற்குப் பயணித்தனர்.

செல்லும் வழியில் அவர்களை வழிமறித்த கடத்தல் கும்பல் அங்கிருந்த 17 பேரையும் கூட்டாக கடத்திச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது.

ஓஹியோ மாகாணத்தைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவ அமைப்பு அமெரிக்காவில் உள்ள இதர கிறிஸ்தவ அமைப்புகளுக்கும் இந்தச் சம்பவம் தொடர்பாக தகவல் பகிர்ந்துள்ளது.

கடத்தப்பட்டோரின் தற்போதைய நிலை குறித்து எந்தத் தகவலும் இதுவரை வெளியாகவில்லை. ஹைதியில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகள், கடத்தப்பட்டோரைக் கண்டறியும் முயற்சிகளைத் துரிதப்படுத்த, ஹைதி அரசிடம் வலியுறுத்தி உள்ளனர்.

அமெரிக்க வெளியுறவுத் துறை சார்பிலும் தொடர்ந்து முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (7-5)

# மடு கோயில் மோட்டை

# காணி அபகரிப்பு செயற்பாட்டை கண்டித்து கவனயீர்ப்புப் போராட்டம்

(மன்னார்)

**மடு திருத்தலத்திற்கு உரிய கோயில் மோட்டை விவசாய காணி அபகரிப்பு செய்யப்பட்டு வருகின்றமையை கண்டித்து மடு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள பெரிய பண்டி விரிச்சான் மற்றும் சின்னப் பண்டிவிரிச்சான் கிராம மக்கள் இணைந்து நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியள வில் மன்னாரில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**

மன்னார் பஜார் பகுதியில் அமைதியான முறையில் பல் வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு குறித்த கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்ட வர்கள் பஜார் பகுதியில் இருந்து மாவட்டச் செயலகம் வரை ஊர்வலமாக சென்று வட மாகாண ஆளுநருக்கான மகஜரை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேலிடம் கைய ளித்தனர். (7-5-285)



# கிளாலியில் காணி அளவீடு மக்களினால் தடுத்து நிறுத்தம்



(அக்கராயன்)

கிளிநொச்சி பச்சிலைப்பள் ளியின் கிளாலிக் கிராமத்தில் கடற்படைக்கு வழங்குவதற் கென காணி அளவீட்டை மேற்கொள்ளச் சென்ற நில அளவைத் திணைக்களத்தின் அதிகாரி கள் பொதுமக்களின் எதிர்ப் பினை அடுத்து காணி அள வீட்டை நிறுத்திவிட்டு திரும்பிச் சென்றுள்ளனர்.

கிளாலி கிராமத்தில் கடற் படைக்கு என 5 ஏக்கர் காணி வழங்குவதற்கென நில அள வைத் திணைக்களம் அளவீடு களைச் செய்ய நேற்று முற்ப கலில் கிளாலி கிராமத்திற்கு சென்றனர்.

தகவல் அறிந்து ஒன்று கூடிய மக்கள் நில அளவை முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நில அளவைத் திணைக்களத்தினை திருப்பி அனுப்பியுள்ளனர். பொதுமக் களின் இவ் எதிர்ப்பு நடவடி க்கைக்கு ஆதரவு தெரிவித்து பச்சிலைப்பள்ளி பிரதேச சபை யின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், உப தவிசாளர் ஜகன், உறுப்பினர் வீரபாகுதேவர் ஆகியோரும் கலந்து கொண் டனர். (7-5-100-350)

# கிளிநொச்சியில் பழைய இராணுவ தளபாடங்கள் மீட்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரி வுக்குட்பட்ட பரதன் கோரக் கன்கட்டு முன்பள்ளி வீதியின் நடுப்பகுதி மற்றும் விவசாய வயல் வரம்புகள் வீதியின் கரையோரப் பகுதிகளிலும் நேற்றைய தினம் இராணுவ த்தினரின் பழைய இராணுவ சீருடைகள், தலைக் கவசங் கள், கிட் பக்குகள், மிதிவெடிகள் என்பன அடையாளம் காணப் பட்டுள்ளன. மேலதிக விசார ணைகளை கிளிநொச்சி பொலி ஸார் மற்றும் இராணுவத்தினர் மேற்கொள்ள உள்ளனர்.(7-5-316)



# இனந்தெரியாதோரின் தாக்குதலில் ஒருவர் படுகாயம்

(முறிகண்டி)

முகமாலை வடக்குப் பகுதி யில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு முன்பாக பொருட் களை வாங்கிக் கொண்டு வந்த ஒருவர் மீது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணியளவில் இனந்தெரியாத குழுவினர் சரமாரியாக தாக்கு தல் நடத்திவிட்டு தப்பி சென்று ள்ளனர்.

இதனால் தலை மற்றும் கை, கால்களில் பலத்த காய மடைந்த நிலையில் குறித்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக சாவக ச்சேரி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக பளை பொலிஸ் நிலையத்தில் முறை ப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-5-100-316)

# பூநகரி மக்களின் தேவைகள் தொடர்பில் பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிப்பு

(முறிகண்டி)

பூநகரி பிரதேச மக்களின் தேவைகள் தொடர்பில் நேற் றைய தினம் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தினால் பூநகரி பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த மகஜரில், நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தின் பின் மக்கள் தமது பொருளாதாரத்தை கட்டி யெழுப்புவதில் பெரும் சவால் களை தொடர்ந்து எதிர்நோக்கி வருகின்றனர்.

அதிலும் குறிப்பாக தற் போதைய நாட்டின் பொரு ளாதார நிலைமை மேலும் மக்களை அவல நிலைக்கு கொண்டு செல்கின்றது. விவ சாய ரீதியான செயற்பாடுகள் மற்றும் மீன்பிடி ரீதியான செய ற்பாடுகள் மிகவும் கவலை க்குரிய விடயமாகவே காணப் படுகின்றது. அதிகம் கடல் வள த்தையும் விவசாயத்தையும் நம்பியே மக்களின் வாழ்வா தாரம் தங்கியுள்ளது.



அந்த வகையில் பொருளா தாரத்தை உயர்த்துவதற்கு பூநகரி பிரதேசத்தில் பல தடை கள் காணப்படுகின்றன. அந்த தடைகளில் இருந்து மக்கள் விடு விக்கப்பட்டால் மக்களின் பொரு ளாதாரத்திற்கும் மற்றும் வாழ் வாதாரத்திற்கும் உதவியாக அமையும் என குறி ப்பிடப்பட் டுள்ளது.

மேலும் காணிக்கான உறு திப்பத்திரங்கள் விரைவாக வழங்கப்பட வேண்டும். காணி தேவைப்படும் குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட வேண் டும், நெற் செய்கைக்காக வயல் நிலங்கள் இல்லாத நபர்களுக்கு வயல் நிலங்கள் வழங்கப்பட வேண்டும், பூநகரி பகுதியில் பாரம்பரிய விதை வங்கி நிலை யம் ஒன்று நிறுவப்பட வேண் டும், மீன்பிடியில் ஈடுபடும் மீன வர்களுக்கு வருடத்திற்கு ஒரு தடவையேனும் மானிய அடிப்படையில் மீன்பிடி உப கரணங்கள் வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளடக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (7-5-100-316)



கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகம் அவுஸ்திரேலிய மருத்துவ நலச் சங்கத்தின் நிதி அனுசரணையில் 1.9 கோடி ரூபாய் நிதியில் 5 இரத்த சுத்திகரிப்புஇயந்திர தொகுதிகளைக் கொண்ட சிகிச்சை நிலையம் கிளிநொச்சி வைத்தியசாலையில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

மாவட்ட வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் எஸ். சுகந்தனின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன்பந்துல சேனா, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப் பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ந.சரவணபவன், கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தின் தலைவர் ஜெயசுந்தர உட்பட பலர் கலந்து கொண்ட னர். (படம்-தேவானந்தன்)

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2021-16.11.2021



**நினைத்தவுடன் செயலில் இறங்கி நிம்மதியை வரவழைத்துக் கொள் ளும் மேஷ இராசி வாசகர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய் 6 ஆம் இடத்தில் 6 இற்கு அதிபதி புதனோடு இணைந்து சஞ்சரிக்கிறார். தனாதிபதி சுக்கிரன் தன ஸ்தானத்தைப் பார்க்கிறார். நீச்சம் பெற்ற குரு, சனியோடு இணைந்து 'நீச்சபங்க இராஜயோக'த்தை உருவாக்குகிறார். எனவே இம்மாதத்தில் தொழில், உத்தியோகங்களில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**துலா - செவ்வாய் சஞ்சாரம்**

ஐப்பசி 6 ஆம் திகதி, துலாம் இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசி நாதன் செவ்வாய், சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியைப் பார்க்கிறார். எனவே திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெற வழிபிறக்கும். பஞ்சமாதிபதி சூரியனோடு செவ்வாய் இணைந்திருப்பதால், பிள்ளைகள் வழியில் நல்ல தகவல் வந்துசேரும். குடும்பத்தில் உள்ள மற்றவர்களும் வருமானம் ஈட்டும் வாய்ப்பு உருவாகும்.

**சனி - செவ்வாய் பார்வை**

ஐப்பசி 7 ஆம் திகதி முதல் துலாத்தில் உள்ள செவ்வாயை, மகரத்தில் உள்ள சனி பார்க்கப்போகிறார். சனி - செவ்வாய் பார்வை அவ்வளவு நல்லதல்ல. இருப்பினும் பெரிய பாதிப்புகள் ஏற்படாது. தொழில் ஸ்தானத்தில் வீற்றிருக்கும் சனி பகவான், சப்தம ஸ்தானத்தில் உள்ள செவ்வாயைப் பார்ப்பதால், வேலைவாய்ப்பு கிடைக்கும். தொழிலை விரிவு செய்ய நினைப்பவர்களுக்கு, பணத்தேவை பூர்த்தியாகும். அஷ்டமாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால், ஒரு சில இழப்புகளையும் சந்திப்பீர்கள். சொத்து வாங்கும்போது கவனம் தேவை.

**பொன்னான புதன் பெயர்ச்சி**

ஐப்பசி 13 ஆம் திகதி, துலாம் இராசிக்கு புதன் வருகிறார். அங்குள்ள சூரியனோடு சேர்ந்து 'புத- ஆதித்ய யோக'த்தை உருவாக்கிறார். எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு பற்றிய தகவல் வந்து சேரும்.




**தனுசு - சுக்கிரன் சஞ்சாரம்**

ஐப்பசி 14 ஆம் திகதி, தனுசு இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 7 இற்கு அதிபதியான அவர், 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். பாகப் பிரிவினை சுமுகமாக முடியும். பழைய நகைகளைக் கொடுத்து விட்டுப் புதிய நகைகளை வாங்குவீர்கள்.

**கும்ப - குரு சஞ்சாரம்**

ஐப்பசி 27 ஆம் திகதி, குரு பகவான் கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். இதன் விளைவாக நல்ல மாற்றங்கள் வரப் போகிறது. சகோதர ஸ்தானம், பூர்வ புண்ணிய ஸ்தானம், களத்திர ஸ்தானம் ஆகிய இடங்களில் குருவின் பார்வை பதிவதால் சகோதர ஒற்றுமை பலப்படும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் பொருளாதாரம் பெருகும். குடும்ப ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்பு கிடைத்து, அதன்மூலம் உதிரிவருமானங்கள் வந்து சேரும். கணவன் - மனைவிக்குள் அன்பு அதிகரிக்கும். நீச்சபங்க இராஜயோகத்தின் பலனால் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குருப் பெயர்ச்சிக்குப் பிறகு குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். பணிபுரியும் பெண்களுக்கு, பல நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கும்.

இம்மாதம் செவ்வாய்க்கிழமைகளில் முருகப்பெருமானை வழிபடுங்கள்.

## தொழில், உத்தியோகங்களில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**தன்னைப் போல பிறரும் ஒளிவு மறைவின்றி பேச வேண்டுமென நினைக்கும் ரிஷப இராசி வாசகர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சுக்கிரன் சப்தம ஸ்தானத்தில் இருந்து உங்கள் இராசியைப் பார்க்கிறார். அவருக்கு பகைக் கிரகமான குருவின் பார்வையும், உங்கள் இராசி மீது பதிகிறது. எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும்.

**துலாம் - செவ்வாய் சஞ்சாரம்**

ஐப்பசி மாதம் 6 ஆம் திகதி, துலாம் இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது 'விபரீத இராஜயோக' அடிப்படையில் சில நல்ல பலன்கள் வரலாம். குடும்பப் பிரச்சினைகள் தீரும். வெளிநாட்டு அழைப்பு வரலாம். சக பணியாளர் தொல்லை நீங்கும்.

**சனி - செவ்வாய் பார்வை**

ஐப்பசி 7 ஆம் திகதி முதல், துலாத்தில் உள்ள செவ்வாயை, மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். இந்த காலத்தில் சுபவிரயங்கள் அதிகரிக்கும்.

இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான வழிபிறக்கும். பாகப் பிரிவினை சாதகமாகும். பழைய சொத்துக்களை விற்றுவிட்டுப் புதிய சொத்துக்கள் வாங்க ஆர்வம் காட்டுவீர்கள். விரும்பத்தக்க மாற்றங்கள் அமையும். உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்லுங்கள்.

**பொன்னான புதன் பெயர்ச்சி**

ஐப்பசி 13 ஆம் திகதி, துலாம் இராசிக்கு புதன் செல்கிறார். அங்கு சூரியனோடு இணைந்து 'புத - ஆதித்ய யோக'த்தை உருவாக்குகிறார். மறைந்த புதனால் நிறைந்த தன லாபம் கிடைக்கப் போகிறது. கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றியாகும். அரசு வேலைக்கான முயற்சி கைகூடும். மாமன் - மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள்.




**தனுசு - சுக்கிரன் சஞ்சாரம்**

ஐப்பசி 14 ஆம் திகதி, தனுசு இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிநாதனாகவும், 6 இற்கு அதிபதியாகவும் விளங்கும் சுக்கிரன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும்போது, எதிர்பாராத நல்ல திருப்பங்கள் உருவாகும்.

கடன்சுமை குறைய வழிபிறக்கும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். உத்தியோகத்தில், உங்கள் திறமைக்கேற்ற பதவி உயர்வு கிடைக்கும்.

**கும்ப - குரு சஞ்சாரம்**

ஐப்பசி 27 ஆம் திகதி, குரு பகவான் கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார்.

இதன் பயனாக குடும்ப முன்னேற்றம் கூடும். பதவி மாற்றங்கள், இடமாற்றங்கள் பரிசீலனைக்கு வரும். கூட்டுத் தொழில் புரிவோர் தனித்து இயங்க முற்படுவர்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். செய்யும் காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் வேலை வாய்ப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றியாகும்.

வீடு மாற்றங்கள் இனிமை தரும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். எதிர்பார்த்த பதவி உயர்வு வந்துசேரும்.

இம்மாதம் வெள்ளிக்கிழமைகளில் வராகியை வழிபடுங்கள்.

## திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும்

(தொடரும்...)

# ஜனாதிபதியும் விவசாயத்துறை அமைச்சரும்

# விவசாயிகளிடம் மன்னிப்புக்கோர வேண்டும்

## சம்பிக்க வலியுறுத்து

**(கொழும்பு)**

**சேதன பசளை திட்டம் தோல்வி என்பதை ஜனாதிபதியும், விவசாயத்துறை அமைச்சரும் ஏற்றுக்கொண்டு விவசாயிகளிடம் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும். விவசாயிகளின் போராட்டத்திற்கு தீர்வு வழங்காவிட்டால் பாரிய விளைவு ஏற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

விவசாயத்துறை தொடர்பில் எவ்விதமான தூரநோக்கு சிந்தனைகளுமில்லாமல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இரசாயன உரப் பாவனை மற்றும் இறக்குமதியை கடந்த ஏப்ரல் மாதம் தடை செய்தார்.

இதனால் ஏற்படும் விளைவுகளை அப்போதே எடுத்துரைத்தோம்.

இரசாயன உரப் பாவனை உடலாரோக்கியத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் என அரசாங்கம் குறிப்பிடும் காரணிகள் நகைப்புக்குரியது.

இரசாயன உரம் தடை செய்யப்பட்ட காலத்திலிருந்து தற்போது வரை இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்கள் உற்பத்திக்கு இரசாயன உரம் பாவிக்கவில்லை என்பதை அரசாங்கத்தினால் உறுதிப்படுத்த முடியுமா?

இரசாயன பசளை இறக்குமதி செய்வதற்கு தேவையான நிதி இல்லை என்பதை அரசாங்கம் பகிரங்கமாக குறிப்பிட வேண்டும்.

அதனை விடுத்து நகைச்சுவையான காரணிகளை குறிப்பிடுவது சிறுபிள்ளைத்தனமானது.

சேதனப் பசளையை பயன்படுத்தி விவசாயத்தில் வெற்றி பெற்ற நாடுகள் ஏதும் உலகில் கிடையாது.

ஆகவே சேதன பசளை திட்டம் தோல்வி என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் விவசாயத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவும் ஏற்றுக் கொண்டு விவசாயிகளிடம் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும்.

இந்தியாவில் விவசாயிகள் அண்மையில் முன்னெடுத்த போராட்டத்தை அரசாங்கம் கருத்திற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார். (4-5)

# மேலும் ஒரு தொகுதி பைஸர் நாட்டை வந்தடைந்தது

(கொழும்பு)

அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட பைஸர் தடுப்பூசியின் மேலுமொரு தொகுதி நேற்று அதிகாலை நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அதன்படி, மேலும் 6 இலட்சத்து 8 ஆயிரம் பைஸர் தடுப்பூசிகள் நாட்டுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.



இலங்கைக்கு இதுவரை 1.7 மில்லியன் பைஸர் தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5)

# மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டால் அரசிற்கு பாதகமாக அமையும்

## முருத்தெட்டுவே தேரர்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல் இடம்பெற்றால் அதன் பெறுபேறு அரசாங்கத்திற்கு பாதகமாக அமையும் என்பதனால் தேர்தலை நடத்தும் முயற்சியை அரசாங்கம் கைவிட வேண்டும் என முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

மக்கள் அரசாங்கத்தின் மீது வெறுப்படைந்துள்ளார்கள் என சுட்டிக்காட்டிய அவர், மாகாண சபை தேர்தலுக்கு ஒதுக்கும் நிதியை நடத்தர மக்களின் முன்னேற்றத்திற்கு அரசாங்கம் ஒதுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அரசாங்கத்திற்கு ஆதரவாக செயற்படும் தரப்பினரை திருப்திப்படுத்துவதற்காகவே மாகாணசபை தேர்தல் நடத்தப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு தேர்தலை நடத்த வேண்டாம் என வலியுறுத்தி 12 பௌத்த அமைப்புக்களின் தலைவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் அடிப்படையில் ஜனாதிபதி செயற்படுவார் என நம்புவதாகவும் ஆனந்த தேரர் தெரிவித்தார்.

மேலும் புதிய அரசியலமைப்பின் ஊடாக மாகாண சபை தேர்தல் முறைமையை முழுமையாக இரத்து செய்யுமாறு ஜனாதிபதியிடம் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளதாகவும் ஆனந்த தேரர் குறிப்பிட்டார். (4-5)

# இன்று ஒரு தகவல்

## வெல்லும் வழி ஒன்று

ஆசைகள் இல்லாத மனிதனே இல்லையே, அப்படி இருக்கையில் அதற்கு அணை போடுவதா என்று ஒரு கேள்வி.

நோயால் பாதிக்கப்படாத மனிதனே உலகில் இல்லை என்பதற்காக, நோய்கள் மனிதனுக்குத் தேவை என்று முடிவுக்கு வருவது புத்திசாலித்தனமான செயலாகுமா? என்பது பதில். ஆசையும் ஒரு நோய் தான்.

நோயை ஒழிப்பதற்குக் காரணத்தைக் கண்டு பிடித்துக் கசப்பான மருந்துகளைச் சாப்பிட்டு, பத்தியமும் இருக்கிறோம். அதாவது, அந்த நோயை ஒழிக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கிறோம்.

அதேபோல் நம் ஆசைகளின் அடிப்படைக் காரணத்தை உணர்ந்து, அதைக் களைந்து எறிவதுதான் புத்திசாலித்னமான செயலாக இருக்க முடியும். முதல்படியாக ஆசைக்குக் காரணமாக உள்ள பொருளில் ஏதோ ஓர் இனிமை இருப்பதாக எண்ணுகிறோம், அந்த எண்ணம் அகல வேண்டும்.

மக்கிப் போன எலும்புத் துண்டில் எந்த விதமான உணவுச் சத்தும் கிடையாது என்ற உண்மை நாய்க்குத் தெரியாது. ஆனால், அந்த எலும்புத்துண்டைப்போட்டுக் கடித்து குதறிக் கொண்டிருக்கும், இறுதியில் சாறு வரும்.

எலும்புத்துண்டைக் கடித்தனால் தன் வாயில் ஏற்பட்ட காயத்திலிருந்து வரும் இரத்தமே அது என்ற உண்மையை உணராத அந்த நாய், அது எலும்புத் துண்டிலிருந்து வரும் இரத்தமே என்று எண்ணிக் கொண்டு விடுகிறது.

இதேபோல் தான்; ஆசைக்குக் காரணமாக உள்ள பொருளில் இனிமை இருக்கிறது என்று எண்ணுவதும். சரி, உண்மையிலேயே அந்தப் பொருள் இனிமை தருவதாக இருந்தாலும் எத்தனை நாளைக்கு அதில் விருப்பம் இருக்கும்?

ஒரு டிரான்சிஸ்டர் வாங்கிவிட்டால் அது உலகமே தனதாகிவிடும் என்று எண்ணி வாங்கியும் விட்ட ஒருவரது டிரான்சிஸ்டரைப் பத்தாவது நாள் நீங்கள் காண வேண்டும் சிலந்திப்பூச்சி அதில் வலை பின்னிக் கொண்டிருக்கும்.

இப்படி ஒரு நிரந்தரமான இனிமை தராத பொருளுக்காக ஏன் ஏங்கித் திரிய வேண்டும்? உடலையும் உள்ளத்தையும் ஏன் வருத்திக் கொள்ள வேண்டும்?

ஒவ்வொரு பொருளும் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு விதமான ஆசைகளை உண்டுபண்ணுவதால் எந்தப் பொருளைப் பெற்றாலும் நாம் நிலையான இனிமையைப் பெற முடியாது.


இனிமை நம் உள்ளத்தில் அல்லவா இருக்கிறது? வெளியே தேடியலைந்தால் எப்படிக் கிடைக்கும்?

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## பலமும் பலவீனமும்



பலம் பலத்துடன் மோதினால் ஆரோக்கியமான போட்டி இருக்கும். பலம் - தன்னை விட பலவீனத்துடன் போட்டியிட்டால் அது போட்டியாகஇருக்காது. கோமாளித்தனமாக, கேலிக்கூத்தாக ஆகிவிடும்.

இதைத்தான் "நரிக்கு இடம் கொடுத்தால் கிடைக்கு ரெண்டு ஆடு கேட்கும்'' என்று பழமொழியாக சொல்வார்கள். தனக்கு நிகரான தகுதி இல்லாதவர்களிடம் சமமாக் போட்டி போடக்கூடாது.

அது அற்பனுக்கு கிடைத்த அதிர்ஷ்டம் மாதிரி தகுதி இல்லாதவன் தோற்றால் அது ஒரு பெரிய விடயமே இல்லை. ஒரு வேளை சந்தர்ப்ப சூழ்நிலை அவனுக்கு சாதகமாகி விட்டால் தகுதி இல்லாதவன் முன்னால் தலை குனிய வேண்டும்.

ஒரு காட்டில் சிங்கம் தன் குகையில் குட்டிகளோடு சந்தோஷமாக இருந்தது. சிங்கத்திடம் குட்டிகள் தாவி குதித்து, கடித்து விளையாடுவதை சிங்கம் ரசித்து பெருமைப்படும்.

இதை அந்த குகைக்கு அருகில் வசித்து வந்த ஒரு குள்ள நரி பார்த்து மனது வெம்பும்... 'காட்டுக்கே ராஜா... சின்னக்குட்டி விரட்டுது, கடிக்குது.

இது மற்ற மிருகங்களிடம் காட்டும் ஜம்பம் எல்லாம்தன்குட்டிக்கிட்ட காட்ட வேண்டியதுதானே!' என்று பொறாமைப்பட்டது.

ஒருநாள் சிங்கம் வெளியே போயிருந்த சமயத்தில் நரி அந்த குகைக்குள் மெதுவாக 'போய் எட்டிப் பார்த்தது.

(தொடரும்)

# மகாபாரதம்

**சரணம் அடைந்தவரைக் காப்பாற்றுவது - புறாவின் கதை**



பரசுராமர்

தருமர் பீஷ்மரிடம் "காப்பவனுக்கு எது தருமம்?" என வினவ பீஷ்மர் சொல்கிறார்.

"தருமா... சரணம் - அடைக்கலம் என வந்தவரைப் பாதுகாப்பது உத்தமமான தருமம் ஆகும்.

சிபி முதலான அமைச்சர்கள் அபயம் என வந்தவரைக் காத்ததன் மூலம் உத்தம கதியை அடைந்தார்கள்.

பறவைகளுக் குப் பகைவனான வேடன் ஒருவன் புறாவிடம் சரணடைந்தான்.

அதனால் நன்கு உபசரிக்கப்பட்டான். அது தனது மாமிசத்தையே அவனுக்கு அளித்து மேன்மை அடைந்தது" என்ற பீஷ்மர், முன்னர் பரசுராமரால் முசுகுந்த மன்னனுக்கு ஒரு கதை சொல்லப் பட்டது.

பாவங்கள் அனைத்தையும் போக்க வல்ல அந்தக் கதையை இப்போது உனக்குக் கூறுகிறேன் கேள் எனக் கதையைக் கூறத் தொடங்கினார்.

முன்னொரு காலத்தில் வேடன் ஒருவன் கொடிய மனதுடன்காட்டில் அலைந்து திரிந்தான். பறவைகளைப் பிடிக்க இங்கும் அங்கும் வலைகளை விரித்தான்.

வேட்டையாடுவதும், பெண் இன்பமும் தான் அவன் தொழில். நாட்கள் பல சென்ற பிறகும் தனது அதர்மத்தை அவன் உணரவில்லை.

ஒருநாள் பெரும் சுழல் காற்றில் சிக்கிக் கொண்டான். காட்டில் இருந்த மரங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் பேரொலியுடன் வீழ்ந்தன. எங்கும் பெரு மழை. வெள்ளக் காடு.

கடுங்குளிரில் வேடன் நடுங்கினான். வீடு செல்ல வழி தெரியவில்லை. பறவைகள் பெரு மழையால் வெளிவர இயலாது மரப் பொந்துகளில் பதுங்கிக் கிடந்தன.

காட்டு விலங்குகளான சிங்கங்களும், புலிகளும் மழையால் துன்புற்றுத் தரையில் வீழ்ந்தன.

செல்லவும் முடியாமல், நிற்கவும் இயலாது தவித்துக் கொண்டிருந்த வேடனின் கண்ணில் பட்டது ஒரு பெண் புறா.

(தொடரும்)

எல்லா அனுபவங்களுமே கட்டடங்கள் அல்ல;
கட்டடங்கள் கட்டுவதற்கான அடித்தளம் மட்டுமே.
- ஹென்றி ஆடம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பஞ்சம் பசி வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்...

தவத்திரு யோகர் சுவாமிகள் எங்கள் மண்ணில் நடமாடிய ஞானகுரு.

பற்றறுத்து பரமனடியே தஞ்சம் என்று வாழ்ந்த அப்பெரும் ஞானி, பஞ்சம் பசி வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி கிளியே! ஆறுமுகன் தஞ்சமடி என நல்லூர்க் கந்தனை நோக்கிப் பாடிப் பரவினார்.

உண்மையில் தவத்திரு யோகர் சுவாமிகள் இந்திய தேசத்தில் பிறந்து வாழ்ந்திருந்தால்; சீரடி சாயிபோல, ரமணமகரிஷிபோல, சத்யசாய்பாபாபோல அவருக்கும் நிறைந்த பக்தர்களும் வழிபாட்டுத் தலங்களும் இருந்திருக்கும்.

பரவாயில்லை எதையும் விரும்பாத தவத்திரு யோகர் சுவாமிகள் நம்மண்ணில் வாழ்ந்து சமய பேதங்களைக் கடந்து, இறை ஞானத்தை நடைமுறையில் கற்றுத்தந்தேகினார் என்றளவில் அதனை நிறைவுபடுத்தலாம்.

இங்கு தவத்திரு யோகர் சுவாமிகள் கூறிய பஞ்சம் பசி என்ற விடயம் பற்றி சிலாகிப்பது தான் நம் நோக்கமாகும்.

ஆம், எங்கள் நாட்டின் பொருளாதார நிலைமை மிகமோசமாகி வருகிறது.

பொருட்களின் விலைகள் கண்டபாட்டில் எகிறுகின்றன.

சுருங்கக்கூறின் இன்னும் சில நாட்களில் உணவுப் பொருட்களின் விலைகள் வானுயரும்.

எனினும் இதுபற்றி ஆட்சியாளர்கள் கவலை கொள்ளப் போவதில்லை.

அவர்களைப் பொறுத்தவரை வீழ்ந்து கிடக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்பியதான வரலாற்றைப் படைக்க வேண்டும் என்பதுதான்.

ஆனால் வீழ்ந்த பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதை எங்ஙனம் செய்தாக வேண்டும் என்பது பற்றிய சிந்தனை அவர்களிடம் அறவே இல்லை.

மாறாக, மக்களை வதைத்தேனும் பொருளாதாரத்தை உயர்த்தினால் அதுபோதும் என்ற மனநிலையிலேயே அவர்கள் இருக்கின்றனர்.

இந்நிலையில், நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் பொதுமக்கள் அசமந்தமாக இருப்பார்களாயின் வரும் பஞ்சமும் பசியும் தலைவிரித்தாடி மக்களை வதைக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

ஆகையால் அன்புக்குரிய மக்களே! உழுதுண்டு வாழப் பழகிக் கொள்வோம்.

ஆம், சிறு நிலத்தையேனும் வீணே விடாமல், உழுந்தும் பயறும் எள்ளும் விதைத்து அதனை அறுவடை செய்து எங்கள் உணவுக்கான தானியமாய் வீட்டில் சேமித்து வைப்போம்.

கூடவே இருக்கின்ற வயல் அனைத்திலும் நெல் விதைத்து சோற்றுக்குப் பஞ்சம் இல்லை என்ற தன்நிறைவை வீடுகளில் தாராளமாக்குவோம்.

இதற்கும் மேலாக, பால் தரும் பசுவை, மறி ஆட்டை வீடுகளில் வளர்த்து பால்மாவின் விலையேற்றத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளும் அதேநேரம் மா, பலா, வாழை, தென்னை, பப்பாசி, கொய்யா, தோடை, எலுமிச்சை, முருங்கை என மரம் வளர்ப்போம்.

பூச்சாடிகளில் கத்தரியும் வெண்டியும் மிளகாயும் காய்க்கட்டும். எங்கள் வீட்டில் விளைந்தவை எங்களுக்கு உணவு என்றால், பஞ்சம் பசி வந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி கிளியே! என்று மார்தட்டுவோம்.

# தமிழக மீனவர்கள் மீது இலங்கை மீனவர்கள் தாக்கலாம்

## தமிழகக் காவல்துறை எச்சரிக்கை

(சென்னை)

சர்வதேச கடற்பரப்பில் இலங்கை மீனவர்களால் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படக்கூடும் என்று, தமிழகக் காவல்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

த ஹிந்து பத்திரிகை இந்தச் செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் அத்துமீறி இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்கின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், வெளிநாட்டுப் படகுகளுக்கு எதிராக நல்லாட்சிக் காலத்தில் அமுலாக்கப்பட்ட சட்டதிட்டங்களை உரிய முறையில் அமுலாக்கக்கோரியும் நேற்று முன்தினம் வடக்கில் கடற்பேரணி போராட்டம் ஒன்றை இலங்கை மீனவர்கள் முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையிலேயே தமிழக மீனவர்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே சர்வதேச கடலெல்லையைத் தாண்டி செல்வதைத் தவிர்க்குமாறு தமிழக மீனவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-3)

# வடமாகாண பாடசாலைகளில் 21ஆம் திகதி முதல் கோவிட் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

கோவிட்-19 தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் 18,19 வயதுடைய அனைவருக்கும் பைஸர் கோவிட்-19 தடுப்பூசியானது நாடு முழுவதும் ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி வியாழக்கிழமை முதல் வழங்கப்படவுள்ளது. அந்தவகையில் வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளிலும் இத்தடுப்பூசியானது வழங்கப்படவுள்ளது.

இ[illegible]று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கல்விப் பொது தராதர உயர்தர பரீட்சைக்கு இரண்டாவது தடவையாக தோற்றவுள்ள மாணவர்களும் அவர்களது பாடசாலைகளிலேயே இத்தடுப்பூசியினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் பாடசாலையைவிட்டு விலகிய 18, 19 வயதுடையவர்களுக்கு அவர்களுடைய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைகளில் சனிக்கிழமைகளில் இத்தடுப்பூசியானது வழங்கப்படும்.

இத்தடுப்பூசியினைப் பெற்றுக்கொள்வதற்கு 18, 19 வயதுடைய அனைவரும் தமது தேசிய அடையாள அட்டையினை அன்றைய தினத்தில் தமது சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் சமர்ப்பித்து தமது வயதினை உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளிற்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும் தெல்லிப்பழை, பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்றுறை ஆதார் மருத்துவமனைகளிலும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 23, 30ஆம் திகதி சனிக்கிழமைகளில் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் அல்லது பாடசாலையில் அவ்வாறான நிலைமைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் சுகாதார மருத்துவ அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு மேற்குறிப்பிட்ட மருத்துவமனைகளில் ஏதாவது ஒன்றில் தமக்குரிய தடுப்பூசியினைப் பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு 18, 19 வயதுடையவர்களுக்கு தடுப்பூசி வழங்கலானது முடிவுக்குவரும் நிலையில் அதனைத் தொடர்ந்து 17, 16, 15 வயதுடையவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றுள்ளது.

(ம-3,18,33,104)

# நாட்டில் நேற்று மேலும் 569 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 569 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் புதுவருட கோவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 354 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 492, 975 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## மருத்துவக் குறிப்பு

அவரைப் பிஞ்சு இரத்தக் கொதிப்பைத் தடுக்கும் என்றும் சமீப காலத்தில் கண்டறியப்பட்டுள்ளது. திருநீற்றுப்பச்சிலை சாப்பிட சுகப்பிரசவம் ஆகும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## இளமையிலேயே ஆன்மிகம்

❖ நாம் நல்ல, தீய எண்ணங்களின் உரிமையாளர்களாக இருக்கிறோம். நல்ல எண்ணங்களின் கருவிகளாக செயற்பட்டால் தூய்மை பெறுவோம்.

❖ நாம் இருக்கும் நிலைமைக்கு நாமே பொறுப்பாளிகள். நாம் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ, அதை நம்மாலேயே உருவாக்கிக் கொள்ள முடியும்.

❖ புது மலர்களே இறைவனின் பாதங்களில் இடுவதற்கு தகுதி பெற்றவை. அதுபோல வலிமை, வளமை, அறிவுக்கூர்மை கொண்ட இளமைக் காலத்திலேயே இறைவனை அறிய முயலுங்கள்.

❖ ஒழுக்கம், மனவலிமை, விரிந்த அறிவு, தன்னம்பிக்கை இவற்றையெல்லாம் குழந்தைகளுக்கு வழங்குவதாக கல்வி அமைய வேண்டும்.


❖ மேலை நாட்டு அறிவியல் நுட்பத்தோடு வேதாந்த கருத்துக்களையும் இணைத்துக் கொள்ளுங்கள். அப்போது தான் முழுமை பெற முடியும்.

❖ லட்சியமில்லாதவன் இருட்டான பாதையில் தடுமாறி சென்று கொண்டிருப்பான். எனவே, குறிக்கோளை ஏற்று வாழ்வு நடத்துங்கள்.

# பல யுத்த களங்களையும் ஆக்கிரமிப்புக்களையும் கண்ட ஆப்கானிஸ்தான்

23

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



இப் போராளி குழுக்கள் மொத்தமாக புதிய பலம் பெறுவதற்கு முன்பாக அவர்களை ஒடுக்க வேண்டும் என்பதற்காக காபூலை கைப்பற்றி சில நாட்களிலேயே தலிபான்கள் இந்த மலை தொடருக்கு படையெடுப்பை மேற்கொண்டு இருந்தனர். தலிபான்கள் மலை தொடருக்கு அருகேயுள்ள முக்கிய நகரங்கள் அனைத்தையும் மிக விரைவில் கைப்பற்றி விட்டனர். இதனால் பள்ளத்தாக்கின் பொருள் விநியோகப் பாதை தடைப்பட்டது.

2021.09.04 ஆம் திகதி வந்த செய்தியின்படி பஞ்ச்ஷிர் மாகாணமும் தலிபான்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டதாக தகவல்கள் வெளியாகின. ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில், ஆப்கானிஸ்தான் முழுவதும் தலிபான்கள் கட்டுக்குள் வந்துவிட்டதாக தலிபான்கள் வட்டாரம் கூறியதாக செய்தி வெளியிட்டிருந்தது. ஆனால், இதை நிராகரித்திருந்த அம்ருல்லா சாலே, எதிர்ப்பு தொடர்வதாகவும், எனது இடத்தில், எனது இடத்திற்காகவும் அதன் கண்ணியத்தைக் காக்கவும் நான் இருக்கிறேன் என டுவிட்டரில் பதிவிட்டிருந்தார். அம்ருல்லா சாலேவின் மகன் எபதுல்லா சாலேவும், தலிபான்கள் கைப்பற்றியதாக வெளியான தகவலை மறுத்திருந்தார்.

### புதிய ஜனாதிபதியாக வருவார் என எதிர்பார்க்கப்பட்ட அப்துல் கனி பரதர்

அப்துல் கனி பரதர் 1968 இல் ருஸ்கான் மாகாணத்தில் பிறந்தார். 1980 களில் சோவியத் யூனியனுக்கு எதிராக ஆப்கான் முஜாஹிதீனாக போராடினார். 1992 இல் அமெரிக்க ஆதரவு பெற்ற ஆப்கான் முகாஜிதீன்களால் ரஷ்யர்கள் வெளியேற்றப்பட்டனர். அதன்பின் நான்கு ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்தது. இந்த நேரத்தில்தான் பரதர் மற்றும் அவரது மைத்துனர் முகமது உமர் ஆகியோர் தலிபான் இயக்கத்தை நிறுவினர்.

தலிபான்கள் 1996 ஆம் ஆண்டில் வலிமையான சக்தியாக மாறினார்கள். இப்போது எப்படி ஆட்சியை கைப்பற்றினார்களோ அப்போது ஒரு மாகாணத்தை கைப்பற்றி ஆட்சிக்கு வந்தார்கள். முகமது உமரின் வெற்றிக்கு பின்புலமாக இருந்ததால் அப்போது பரதர், வெற்றிகளுக்குப் பாராட்டப்பட்டார்.

அப்துல் கனி பரதர் தலிபான்

அப்துல் கனி பரதர்



படையின் தலைவராகவும் ஒரு அரசியல் இயக்க தலைவராகவும் செயற்பட்ட நிலையில் சிஐஏவினால் கராச்சியில் கண்காணிக்கப்பட்ட பிறகு, 2010 ஆம் ஆண்டில் பாகிஸ்தானின் உளவு நிறுவனமான ஐஎஸ்ஐ அவரை கைது செய்தது. ஆனால் டோஹா ஒப்பந்தத்தின் பேரில் அமெரிக்கா போட்ட உத்தரவின் பேரில் கடந்த 2018 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்டார்.

அப்துல் கனி பரதர் அண்மையில் கூறும் போது, நாங்கள் ஆப்கானிஸ்தானில் அரசு படைகள் மற்றும் அமெரிக்க படைகளுக்கு வேலை செய்தவர்கள், உதவியர்களை பழி வாங்க மாட்டோம். அவர்களுக்கு பொது மன்னிப்பு அளிப்போம். மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவோம். பெண்களுக்கு கல்வி, அரசியலில் முக்கியத்துவம் கொடுப்போம் என்றார்.

### எழுந்து வரும் கேள்விகள்

தலிபான் அரசு, மீண்டும் அரியணை ஏறுமென யாராவது நினைத்தார்களா? மீண்டும் வந்துள்ளவர்கள் தங்களது முன்னைய அதே ஆட்சியையா அமுல்படுத்துவார்கள்? இதுதான், எழுந்து வரும் கேள்விகளாகின்றன. எனினும், ஆட்சியை அகற்றிய கையோடு தலிபான்கள் நடந்துகொண்ட விடயங்கள் சற்று முன்னேற்றத்தையே காட்டுகின்றன.


இதுவரைக்கும் அங்கு தங்கியிருந்த வெளிநாடுகளின் தூதுவர்களை கௌரவமாக வெளியேற்றியமை, வங்கிகளில் வைக்கப்பட்டிருந்த பணங்களை மீளப்பெற்றுக் கொள்ள பொது மக்களுக்கு கால அவகாசம் வழங்கியமை, அயல் நாடுகளின் குறிப்பாக பாகிஸ்தான், ஈரான், தஜிகிஸ்தான் மற்றும் இந்தியாவின் உறவுகளைத் தொடர விரும்புகின்றமை எல்லாம், நவீன உலகுடன் இணங்கிச் செல்லும் நல்லெண்ணத் தூதாகத்தான் கருதப்படுகிறது.

தனித்துப் பயணித்ததால், தூக்கி வீசப்பட்ட அனுபவங்களில், தலிபான்கள் சில விடயங்களைக் கற்றுத்தானுள்ளனர். போதை வியாபாரம், சிறுவர் படையணி, தனியான மதக் கல்வி, மட்டுப்படுத்தப்பட்டளவிலான பெண்களின் உரிமைகள், சர்வதேச உறவுகளைப் புறக்கணித்தல், ஆட்கடத்தல் இவைகளெல்லாம் அங்கீரிக்கப்பட்ட ஆட்சிக்கு அடையாளமில்லை.

இப்போது, கிடைத்துள்ள ஆட்சியதிகாரத்தை தக்க வைக்க, சர்வதேச அங்கீகாரம் கட்டாயம் அவசியப்படும். இதற்கான முதல் முன்னோடியைத் தான் தலிபான்கள் செய்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளை வேரறுக்க நடத்தியதே அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு, அமெரிக்கா இதுவரை நடத்தியதில் மிக நீண்ட போர். இதற்காக அவர்கள் செலவழித்தது சுமார் 164 இலட்சம் கோடி ரூபாய். அமெரிக்கப் படையினர், ஆப்கான் இராணுவத்தினர், அப்பாவி மக்கள் என 20 ஆண்டுகளில் சுமார் இரண்டு இலட்சம் உயிரிழப்புகள்.

இப்போது முன்பை விட பலம் பெற்று ஆப்கானிஸ்தானின் அதிகாரத்தை தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர். "இஸ்லாமிக்எமிரேட்ஸ் ஆஃப் ஆப்கானிஸ்தான்" என்று நாட்டுக்குப் பெயரும் கொடுத்து விட்டனர்.



முன்னாள் அதிபர் ஹமித் கர்சாய் உடன் தலிபான்கள் பேச்சுவார்த்தை

### தலிபான்கள் முன்னாள் ஜனாதிபதி ஹமித் கர்சாய் உடன் நடத்திய பேச்சுவார்த்தை

ஆப்கானிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி ஹமித் கர்சாய் உடன் தலிபான்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தகவல் வெளியாகியிருந்தன. தலிபான் தளபதியும் ஹக்கானி தீவிரவாத குழுவின் மூத்த தலைவருமான அனஸ் ஹக் கானி, ஆப்கானிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி ஹமீத் கர்சாயை சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாக தலிபான் தரப்பில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசு அமைப்பது தொடர்பாக இந்த சந்திப்பில் பேசப்பட்டிருக்கும் என்று கூறப்படுகிறது. முந்தைய அரசின் முக்கிய அமைதித் தூதுவரான அப்துல்லா அப்துல்லாவும் இந்த கூட்டத்தில் ஹமீத் கர்சாய் உடன் இருந்தார் என்றும் தலிபான்கள் தெரிவித்திருந்தனர்.

ஹமீத் கர்சாய் மற்றும் அப்துல்லா அப்துல்லாவுடன் தலிபான்கள் ஆலோசனை நடத்தி வருவதால், ஆப்கானிஸ்தான் இராணுவத்தை தோற்கடிப்பது போல் அரசாங்கத்தை அமைப்பது எளிதல்ல என்பதை தலிபான்கள் புரிந்து கொண்டுள்ளன போல் தெரிகிறது என்று ஆய்வாளர்கள் கூறியிருந்தனர்.

ஆப்கானிஸ்தானில் பல்வேறு சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல உயர்மட்ட தலைவர்கள் உள்ளனர். அவர்களின் கருத்து, ஆதரவு இல்லையென்றால், அரசாங்கத்தை அமைத்து நடத்துவது இலகுவான காரியமல்ல.

தலிபான்கள் அதன் முந்தைய ஆட்சியில் ஏற்பட்ட உள்நாட்டு மோதலில் இருந்து விலகிச் செல்ல விரும்பினால், அவர்கள் சில ஆப்கானிஸ்தான் தலைவர்களை தங்கள் பக்கம் அழைத்துச் செல்ல வேண்டும் என்பது வெளிப்படை.

(தொடரும்...)

## விபரீத முடிவெடு...

மாகிச் சில மாதங்களேயான நிலையில் குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகத் தனது வீட்டுக்கு அயலிலுள்ள தோட்டக் கிணறொன்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-3,18)

## அபிவிருத்தி...

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடலில் மாவட்ட அரசாங்க அதிபர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இரு நாட்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பயன்படுத்தி அவர்களிற்கான விளையாட்டு, கலைப் பாடங்களை புகட்டக்கூடிய திறமை வாய்ந்த உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகங்களில் உள்ளனர்.

நீண்ட நாட்கள் இடைவெளியின் பின்னர் பாடசாலைக்கு திரும்பும் மாணவர்களை அன்புடன் வரவேற்க வேண்டும். அன்று ஆசிரியர்கள் சமுகமளிக்காவிடின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பயன்படுத்தி அவர்களிற்கான விளையாட்டு, கலைப் பாடங்களை கற்பிக்க முடியும்.

அனைத்து பிரதேச செயலாளர்களும் பாடசாலை நடவடிக்கைகளை கண்காணித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வர் என கலந்துரையாடலின்போது மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,100)

## 21ஆம் திகதி...

பாடசாலைக்கு சமுகமளித்து மாற்று தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவும் தீர்மானித்துள்ளனர்.

அன்றைய தினமே பிற்பகல் 2 மணியளவில் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களைப் பின்பற்றி நாடு தழுவிய ரீதியில் போராட்டத்தில் ஈடுபடவும் தீர்மானித்துள்ளோம்.

முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் தொடரும் என அகில இலங்கை ஆசிரியர் - அதிபர் சேவை சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்கத்தினருக்கிடையில் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தை தொடர்பில் வினவியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-3)

## சகோதரர்கள்...

காயமடைந்துள்ளனர்.

குடும்பத் தகராறு காரணமாக உறவினர் ஒருவரால் சகோதரர்கள் மீது குறித்த வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 34 மற்றும் 23 வயதான சகோதரர்களே இவ்வாறு காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,30)

## 23 பேர்...

13 பெண்களினதும் மரணங்கள் இவ்வாறு பதிவாகின.

அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரையில் கோவிட்-19 தொற்றினால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 13,507 ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)

## வவுனியாவில்...

மாலை இடம்பெற்ற இவ் விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது,

மதவாச்சி - மன்னார் பிரதான வீதியில் பயணித்த டிப்பர் வாகனம் செட்டிகுளம், முதலியார்குளம் பகுதியில் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் செட்டிகுளம், முகத்தான்குளம் பகுதியைச் சேர்ந்த ஆ.சயந்தன் (வயது - 15) என்ற சிறுவனே இவ்வாறு மரணமடைந்தவராவார். (ம-3,250)

## மிருசுவிலில்...

புகையிரதத்தில் மோதுண்டு பத்துக்கும் மேற்பட்ட மாடுகள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளன.

குறித்த சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

பரீட்சார்த்த சேவையில் ஈடுபட்டிருந்த புகையிரதம் யாழ்.நகர் நோக்கிப் பயணித்த நிலையில் மேற்படி பகுதியில் கூட்டமாகப் பயணித்த மாடுகளைக் குறித்த புகையிரதம் மோதியுள்ளது. சம்பவத்தில் பத்திற்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்தன. (ம-3,18,30,100,316)

## ராஜபக்ஷ...

என கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது தெற்கு அரசியலில் ஆட்சி மாற்றம் என்ற ஒரு காற்று வீசுகின்றது. எனினும் எதிரணியினர் ஆகிய நாம் பொறுத்திருந்து பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

அதாவது இந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு வாக்களித்த சிங்கள மக்களே இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் எதிர்க்கட்சியாகிய நாங்கள் உள்ளோம்.

ஆனால் ஒரு கேள்வி எழுகின்றது. நீங்கள் எதிர்க்கட்சிகள் ஏன் இந்த அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என. அதற்கு நாங்கள் கூறும் பதில் பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கத்தை சிங்கள மக்களே, "நீங்கள் காணும் வீட்டுக்குப் செல்லுங்கள்" என்று கூறும் நிலைதான் தற்போது உருவாகி உள்ளது. எனவே சிங்கள மக்களே இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப முயற்சிக்கும்போது நாங்கள் தற்போது அவசரப்பட வேண்டிய தேவை இல்லை என்றார். (ம-3,18,33)

## விவசாயி...

இதன் ஓர் அங்கமாக, வலிகாமம் கிழக்கு விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில், புத்தூர் மற்றும் உரும்பிராய் கமநல சேவை நிலையங்கள் முன்பாக, நேற்று முற்பகல் 9.15 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தப் போராட்டத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் பங்கேற்றார்.

வெங்காய இறக்குமதியை முற்றாகத் தடை செய், விவசாயிகளுக்கான உரம், கிருமிநாசிகளை போதியளவு கிடைக்க வழிசெய், உருளைக்கிழங்கு அறுவடை காலத்தில் உருளைக்கிழங்கு இறக்குமதியை தடை செய் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மூளாயில் உள்ள கமநல சேவை நிலையத்திற்கு முன்னாலும் விவசாயிகள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டக்காரர்கள், உரத்தை தடுத்து விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதே, விவசாயிகளே நாட்டின் முள்ளந்தண்டு என்று கூறிவிட்டு விவசாயிகளின் முள்ளந்தண்டினை முறிக்காதே என்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு ஆயித்தியமலை கமநல சேவைகள் திணைக்களத்துக்கு முன்னால் உரத்தை வழங்குமாறுகோரி விவசாயிகள் 'உரம் இன்றி உழவு இல்லை' எனும் தொனிப்பொருளில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ம-3,18,33,281)

## கிளிநொச்சியில்...

வண்டியில் சென்று கொண்டிருந்தபோது இரணைமடுச் சந்தியில் திரும்ப முற்பட்டார்.

இதன்போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## கொரோனா...

ஆரம்பிப்பதை ஒத்திவைக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்கள் கவனயீனமாக இருப்பதை அவதானித்து கவலையடைவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## சட்டங்கள்...

மென தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். (ம-3)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 18/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1149
வெற்றி இலக்கங்கள்
மீனம் 2 8 7 7 6 8
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 18/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0907
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
V 13 25 45 51 75

மஹஜன சம்பத
திகதி 2021/10/18
சீட்டிழுப்பு இலக்கம் 4559
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
C 3 6 0 5 6 6
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 18.10.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2854
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
L 14 38 46 54
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2021.10.18
சீட்டிழுப்பு இலக்கம் - 589
C 12 36 46 81
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7800 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

SUPER BALL
Draw Numnber சீட்டிழுப்பு வாரம் 1535
Colour நிறம் சிவப்பு
Full Draw Date சீட்டிழுப்பு திகதி 2021 / 10 / 17
Week Days Name தினம் ஞாயிறு
L 40 55 58 69
Total Value of Prizes வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை : ரூபா 2,268,360/-
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா Shanida
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2021.10.17
சீட்டிழுப்பு இல: 3696
வர்ணம்: இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.2,753,380/-
வெற்றி இலக்கங்கள் 20 37 41 57
ஆங்கில எழுத்து C
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
Draw Date திகதி 2021 / 10 / 17
Draw Number வெற்றி வாரம் 3247
Colour வர்ணம் ஞாயிறு
வெற்றி இலக்கங்கள் 05 08 22 56
ரிஷபம்
Total Value of Prizes வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,276,440/-

ஜய
சீட்டிழுப்பு வாரம் 753
வர்ணம் மஞ்சள்
திகதி 17. 10 2021 ஞாயிற்றுக்கிழமை
L 14 29 30 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,677,365/-
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1361
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2021.10.17
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,075,740/-
வெற்றி இலக்கங்கள் 01 41 48 67
ஆங்கில எழுத்து Y
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975/=Kg
எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
• நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
• புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
(C-2831)
0768226240 DHL

விற்பனை உதவியாளர் வேலை வெற்றிடம்
Petform (Pvt) Ltd இன் உரும்பிராய் கிளையில் பணி புரிவதற்கு உயர்தரம் வணிகக்கல்வி படித்த மோட்டார் வாகன அனுமதிப்பத்திரமுள்ள 20 - 25 வயதுள்ள ஆண் விற்பனை உதவியாளர்தேவை. (8315)
தொடர்புகளுக்கு:- 076 072 1245, 021 314 9700

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-2836)
எமது கிளைகள்
கிளிநொச்சி சுன்னாகம்
சாவகச்சேரி மானிப்பாய்
நெல்லியடி பருத்தித்துறை
திருகோணமலை வல்வெட்டித்துறை
கோப்பாய் புத்தூர்
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 14 - 03 - 1940

உதிர்வு 18 - 10 - 2021

இணுவில் மேற்கு, ஞானவைரவர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**நாகேஸ்வரி இரத்தினம் (நாகமணி)**

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (C-2843)

ஞானவைரவர் கோவிலடி,
இணுவில் மேற்கு

முருகையா குடும்பம்
இணுவையூர் முருக ஜீவ அறக்கட்டளை

அமெரிக்கா செல்ல
பாஸ்போர்ட் எடுத்து விட்டீர்களா?
விளையாட்டு அல்ல இது உண்மை
அமெரிக்க அதிஸ்ட விசா
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள் (C-2833)
இலவச வாய்ப்பை தவறவிடுவானேன்?
எல்லோருக்கும் வெளிநாடு செல்ல வசதி இருக்காது ஆனால் 18 வயதிற்கு மேற்பட்ட யாரும் இந்த இலவச வாய்ப்பை பயன்படுத்தலாம்.
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
பாஸ்போட் இல்லாமல் விண்ணப்பிக்க முடியாது
பதிவுகள் ஆரம்பம்-07-10-2021
உடனடியாக கொழும்பு சென்று One Day Pass Port எடுங்கள்
V2 Travels 0768226244
0768226237 / 0768226240

DMI - Jaffna (8311)
A/L - 21 Batch
மனைப்பொருளியல் Paper Class
ஆரம்பம்:-20.10.2021 Zoom ஊடாக நடைபெறும்
077 848 0604

இயற்கை நெல் அரிசி விற்பனைக்கு (8318)
இரசாயன உரங்கள், களைநாசினிகள், பூச்சி நாசினிகள் பயன்படுத்தாமல் முற்றிலும் இயற்கை முறையில் பயிரிடப்பட்ட நெல் அரிசி விற்பனைக்கு.
தொடர்பு:-076 799 9005


கனடாவில்
உடனடி வேலைவாய்ப்பு
• Breakfast Attendant • Office Admin
• Front Desk Agent • Night Auditor
• Room Attendant • Pool Attendant
• Housekeeping Supervisor
• Maintenance Worker
• Front Desk/Food Service Attendant
• Guest Service Manager
(C-2832)
தகுதிகள்:- A/L PASS / DIPLOMA/DEGREE
ஆங்கில அறிவு
Hotel Management சம்மந்தமான அனுபவம் /கல்விக்கு முன்னுரிமை வழங்கப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777

## மணமகள் தேவை

கிளிநொச்சி இந்து கௌரவ குடும்பம்,
1982 ஆம் ஆண்டு, திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்து கனடாவில் வசிக்கும் மணமகனுக்கு உள்நாடு / கனடாவில் வசிக்கும் மணமகளை எதிர்பார்க்கின்றோம். (8319)

☎-077 511 2230

# மரண அறிவித்தல்



## இராசம்மா இராமலிங்கம்

வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசம்மா இராமலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (17.10.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும் சண்முகரத்தினம், அனுஷபவானி (Matron - யாழ். போதனா வைத்திய சாலை), பவானி (ஆசிரியை - யா/ ஈவினை அ.த.க பாடசாலை), ஜெயந்திமாலா (சுவிஸ்), முருகானந்ததாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் லோகநாயகி, சிவகுமாரன் (தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை), காலஞ்சென்ற செல்வநாயகம், ரவீந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கிருஷ்ணி, திருக்குமரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - யாழ். பல்கலைக்கழகம்), தாட்சாயினி, செல்வகுமரன், சுபாங்கி, மயூரிக்கா, துஷாந்தன் (சுவிஸ்), கிஷாந்தன் (சுவிஸ்), கோபிஷா (லண்டன்), கோகிஷ் (லண்டன்), விசிந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நிக்ஷயன், சாய்ஷயன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (18.10.2021) திங்கட்கிழமை மதியம் 1.00 மணியளவில் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (இ)

ஈவினை,
புன்னாலைக்கட்டுவன்.

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



பிறப்பு 14 - 03 - 1940

இறப்பு 18 - 10 - 2021

## நாகேஸ்வரி இரத்தினம் (நாகமணி)

இணுவில் மேற்கு ஞானவைரவர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ்வரி இரத்தினம் (நாகமணி) நேற்று (18.10.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லர் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் இராசரத்தினம், காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் பாலகுமார், கோபாலகிருஷ்ணன் (இத்தாலி), அரசகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுமதி, காயத்திரி, கௌசலாதேவி, கல்யாணி (இத்தாலி), சசிரேகா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, மாணிக்கம், சண்முகநாதன் மற்றும் சிந்தாமணி, தியாகராஜா, காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், இராசேந்திரம் மற்றும் பூபாலசிங்கம் ஆகியோரின் பாசம் நிறைந்த சகோதரியும் தேனுஷா, மேனுஷா, சிபோஷன், டினோசா, உஷாந்தினி, உஷாந்தன், உதயசங்கர், துஷாந்தினி, பாரதி, ஹரிகரன், கோபிகா, கபிஷன், யனிஸ்ரன், கனிஸ்ரிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.10.2021) செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காலை 10.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-2842)

ஞானவைரவர் கோவிலடி,
இணுவில் மேற்கு, இணுவில்.

077 616 1879 (மகன்)
077 657 7405 (மகன்)

தகவல்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.